உ

ஸ்ரீ சரஸ்வதி சகாயம்.

கதாவருஷிணி.

பெரும்பாலும் கற்பனைக் கதைகள், தேச சரித்திரங்கள், ஜீவிய சரித்திரங்கள், சம்பாஷணைகள், புராண இதிகாசக் கதைகள் இவைகள் மூலமாக, சன்மார்க்கம், ஜனசாரம், இலௌகிக வைதிக சாஸ்திரங்கள், தமிழ்க்கலை முதலியவற்றின் ஆராய்ச்சியையும் அபிவிர்த்தியையும் ஆக்கும்

ஓர் மாதப்பத்திரிகை.

எல்லாரும் இன்புற் றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன் றறியேன்பராபரமே. தாயுமானவர்.

பருவம் 1.	கலியுகாப்தவருஷம் 5020. காளயுக்திவருஷம் அற்பிசிமீ. கொல்லமாண்டு 1094, துலாமீ. கி. பி. 1918-வருஷம் அக்டோபர்மீ.	மழை 2.

நாட்டுப் பெண்கும்மி.

4-ம் அதிகாரம்.

மஞ்சட் குளித்தல்.

மக்கள் முகங்களில் மஞ்சளைப் பூசின்
　　மனது மகிழும்கண் ணுங்களிக்கும்
துக்கம் அகன்றிடும் துர்க்கந்தம் போய்விடும்
　　சோபனத் துக்கும் குறியாமே. க

பூவி னிறத்தில் சிறந்த நிறம்பசும்
　　பொன்னின் நிறமும் அதுவாகும்
தேவலோகத்தின் நிறமும் அதாகும் செஞ்
　　சோதியும் மஞ்சள் நிறந்தானே. உ

கொஞ்சமாய் மஞ்சளைப் பூசிக் குளிப்பது
　　கோதை முகத்துக் கொளிதருமே
மிஞ்சவே மஞ்சள் அரைத்தப்பிக் கொள்வது
　　வேஷந் தரிப்பதற் கொப்பாமே. ங

நீர்க்கோளை மாற்றுமே கண்வலி போக்கு
　　நோராக மேல்வலி நீக்கிடுமே
சீர்க்குணங் கள்பல மஞ்சளுக்
　　செப்பி விரிக்கும் இடம்

மஞ்சள் அழகும் அழகல்ல என்றதால்
மஞ்சட் கழகுண்டென் றேற்படினும்
நெஞ்சம் நிறைதரு கல்விக் கிதுசற்றும்
நேராகா தென்றறி நாட்டுப்பெண்ணே. ௫

5-ம் அதிகாரம்.

நகையணிதல்.

மண்ணி லிருப்பவர்க் காசையுண் டவ்வாசை
மண்ணாசை பெண்ணாசை பொன்னாசை
பெண்ஆசை கொள்வ தெதன்மேலே அந்தப்
பீர்க்கம்பூ வின்நிறப் பொன்மேலே. ௧

ஆடை அகத்தியம் எல்லார்க்கும் அதன்
மேல்அணி பூண்பதும் ஓரழகே
கூடை அடுக்கெனக் கொண்டமட்டும் நகை
கோத்து விடுவது கோதாமே. ௨

சுந்தர மான முகத்திற் கிரண்டொரு
சோதி மணிநகை சுந்தரமாம்
அந்தம் இலாதவட் காயிரம் பூண்டாலும்
அழகுண் டாகுமோ நாட்டுப்பெண்ணே. ௩

இயற்கை அழகுள்ள பெண்மணிக்குச் சில
ஏற்ற நகைகள் எழில்தருமே
இயற்கை நலமே யிலையெனில் செய்யணி
எள்ளள வுங்குணஞ் செய்யாதே. ௪

அழகு தாரம லிருந்தும் நகைகளை
ஆசையி னாற்சிலர் பூட்டிக்கொள்வார்
கிழவிக ளாகி நரைத்தவ ருங்கூடக்
கேட்டி ரவல்வாங்கி மாட்டிக்கொள்வார். ௫

மருந்துக்குப் போறவள் உள்ள நகைஎல்லாம்
மாட்டிக்கொண் டப்பால் வெளிப்படுவாள்
விருந்துக்குப் போறவள் வீடுவீ டாகப்போய்
வேண்டாத தும்இர வல்கேட்பாள். ௬

... போதும் எதுவேனும் வாங்கி
... காதிலும் போட்டுக்கொள்வார்
... னாலும் போதும்உள்ளே கரும்
... சுமைக் கஞ்சாரே.

திண்ணில் அழிந்துபோம் உண்ணில் அழிந்துபோம்
சேலை யுடுத்திக் கழிந்தழியும்
பொன்னழி யாது நகையழியா தந்தப்
பொன்னிற் பணமெல்லாம் போடுமென்பார். ௮

குப்பையைச் சீத்துப் பொறுக்கையிற் காலிலே
கோழி விலங்கிட்டுக் கொள்வதுபோல்
ஒப்புறுங் கால்களில் பாதசர முதல்
ஒய்யார மான விலங்கிடுவார். ௯

கோக்கண மத்தியில் தொந்தரை செய்கின்ற
கொண்டிமாட் டைப்பிடித் தேயுருக்கி
மூக்கணத் தாம்பினைக் கோத்தது போலத்தம்
மூக்கைத் துளைத்துப் புலாக்கிடுவார். ௰

செங்கதிர் வீசிடும் கெம்பு மாணிக்கங்கள்
சேர்த்திழைத் திட்ட பலநகைகள்
அங்கம் எல்லாம் அணிந்தென்பயன் உள்ள
அழகைக் கெடுத்திடு மானுக்கால். ௰௧

காது நகையைக் கழற்றுரே சிலர்
காணும் அழுக்குந் துடையாரே
ஊது பிணம்போலக் காதுகள் நாறினும்
ஊத்தையைப் போக்க முயலாரே. ௰௨

எப்போதும் காதில் கழுத்தில் கரத்தில்
இடைவிடா மல்நகை போடுவதால்
தப்பாமற் சேதமாம் ரத்தினக் கல்லுக்கும்
தங்கம்பொன் வெள்ளி பணத்துக்குமே. ௰௩

தேய்ந்திடும் பாதி தெறித்திடும் பாதி
தெருவில் அறுந்து விழும்பாதி
காய்ந்ததிற் பாதி உரைத்ததிற் பாதிபொற்
கம்மியர் கொள்வர்செம் பாதியுமே. ௰௪

காதில் ஒன்றுங் கழுத்தில் ஒன்றும் மூ…
கைகளில் ஒன்றுமாம் மூன்றணி…
போதும்என் பார்பெண்கள் கூ…
பூரண மாய்நன்கு பூண்…

6-ம் அதிகாரம்.

பூச்சூடல்.

பூவைப்போல் இந்தப்பூ லோகத்திலே ஒரு
பூரண மான அழகில்லையே
தேவைப்பூ சித்தற்குச் சீருள்ள நற்பொருள்
தேடி எடுப்பது வும்பூவே. க

பூவி லிருப்பவள் சீதேவி வெள்ளைப்
பூவி லிருப்பவள் வாணிஎன்பார்
பூவண்ணம் பூக்குங் கொடிக்கழ காதலால்
பூச்சூடல் பூங்குழ லார்க்கழகாம். உ

சுரும்பே னும்தலை யிற்கலிக்கக் குளிப்
பின்றி உடல்அழுக் கால்நிறைய
சீரெனப் பூநிதம் சூடி அலங்காரஞ்
செய்து திரிவது பேதமையே. ௩

சந்தனம் புஷ்பம் சவ்வாது கொழுந்துகள்
சந்தோஷ மான தினத்திற்கல்லால்
எந்த நாளும்பூவைக் கொண்டையிற் சூடி
இருப்பது பெண்ணுக் கிணக்கமன்றே. ச

மங்கல மாவதும் பூவாமே மண
மக்கள் அணிவதும் பூவாமே
பொங்கொளி செய்வதும் பூவாமே நன்கு
பொழுதின் மலர்வதும் பூவாமே. ரு

மு. போ. ஈசுரமூர்த்தியாபிள்ளை.

என் மனைவினை.

ஓர் சிறு கதை.

(12-ம் பக்கத்தொடர்ச்சி)

ஆறு மாத காலம் சென்றது. சுந்தரிக்கு வில்வனநல்லூரில் இனி
வி[illegible]ருப்பது அசாத்[illegible] எனத்தோன்றியது. ஊரிலுள்ளவர்கள் யாவரும்
ரிஞ்சனை[illegible] [illegible]சை மொழிகளும் வழங்கி அவள் சகோதரரை
யும் அவ[illegible] [illegible]னர்கள். கலியாணசுந்தரமையர் மனைவி
யும் ச[illegible] [illegible]நாத்தி வெகுளியாயிருந்தால் மன்னி
[illegible] [illegible]ற்றமுள்ளவளே யாவாளானல்.—

சுந்தரி எப்பொழுதுமே பிடிவாதமுள்ளவள் என்பது நம் நண்பர் அறிவர். இவர்கள் இவ்விதம் நிந்திப்பதை அவள் சிறிதேனும் பொருட்படுத்தவில்லை. தன் தோழிகளை முன்போல் அவள் அதிகமாகத் தேடுவதில்லை. ஒருவரோடும் பேசாமல் ஆலயத்திற்குச் சென்று பிரகாரங்களில் சுற்றிக்கொண்டிருப்பள். நந்தவனத்திலும் அவளை எப்பொழுதும் காணலாம். இவற்றிற்கெல்லாம் காரணமென என்னையும் வெறுக்கலானுள்.

திடீரென்று அவள் மனம் மாற ஒரு காலம் வந்தது.

சுந்தரியின் தோழி செல்லம்மாள் என்பவள் ஒருவள். அவளை ஓர் நாள் சுந்தரி அழைத்தாள். அவள் ஏதோ கடிதம் எழுதிக்கொண்டிருந்ததில் வரக்கூடவில்லை. கம்பியில்லாத் தந்திமூலமாக சமாசாரம் எட்டியது, சில மாதங்களுக்கு முன் மணந்த தன் கணவனுக்கு அவள் கடிதம் எழுதினளென்று. "எங்கள் காலத்திலெல்லாம் இம்மாதிரி விந்தை இல்லையடி!" என்று பேசிக்கொண்டார்கள் பெண்டிர்கள் ஆற்றங்கரையில்.

சுந்தரியும் சென்று வினவினுள். "ஏனடி! கலியாணமே வேண்டாமென்று கதறினயே அப்படி! அதற்குள் என்ன இது? வாராத காலத்தில் வேம்பும், கண்டகாலே கரும்புமோ?"

செல்லம் சாற்றிய சரிதை சுந்தரியின் மனத்து ஓர் கிளர்ச்சியை உண்டுபண்ணிற்று. "அப்படியா—?" என்று தலையை யசைத்து "நானென்ன இவ்வளவு அறிவற்றவளா?" என்று சிந்தாகுலியாய் அன்று வீடு சேர்ந்தனள்.

அன்று முதல் அவள் நடையே வேறுபட்டது. பிடிவாதமென்பது அவளை விட்டு மெள்ள அகன்றுகொண்டிருந்தது. முன்போல் வெளிச் செல்லுவதில்லை. பெரியோர்களைக் காணில் நாணமுறலானுள்.

சில தினங்களுக்குப் பின் பரதேசி ஒருவன் திருவருட்பாப் பதிகங்களை ஓதிக்கொண்டே வீதிவழி வந்தனன்.

"விண்படைத்த புகழ்த்தில்லை யம்பலத்தா னெவர்க்கு
மேலான னன்பருளம் மேவுநட ராஜன்
பண்படைத்த வெனையறியா விளம்பவருந் தனிலே
பரிந்துவந்து மாலையிட்டான் பார்த்தறியான் மீட்டும்
பெண்படைத்த பெண்கனெலா மவமதித்தே வலது
பேசுகின்றார் கூசுகின்றேன் பிச்சியென [illegible] னென்
கண்படைத்துங் குழியில்விழக் கணக்குமுண் [illegible] வவற்றன்
கணக்கறிந்தும் விடுவேனே கண்டாயென் [illegible]
மண்துணைத்தா னெல்லார்க்கு மி [illegible]
னென்னகத்தும் புறத்து [illegible]

பெண்குணத்தை யறியாத விளம்பருவந் தனிலே
　　பிச்சேற்றி மணம்புரிந்தான் பெரிதுகளித் திருந்தேன்
வண்குணத்தா லநுபவநா னறியநின்ற பொழுதில்
　　வந்தறியா னின்பமொன்றும் தந்தறியா னவனும்
வெண்குணத்தா னல்லன்மிகு நல்லனெனப் பலகால்
　　விழித்தறிந்தும் விடுவேனே விளம்பாயென் ரேழி!

இப்பாக்கள் அவளுக்குத் தனியே வேறொரு பொருள் காட்டி நின்றன. ஆர்வமுடன் ஸ்ரீமத் இராமலிங்க சுவாமிகளின் அருட் பாக்களைப் பெற்றுப் பரிந்து படித்தனள். அப்பாக்கள் யாவும் இவள் மனத்துற்ற கிளர்ச்சிக்கு எற்றதொரு பொருள் பயந்தன.

இதற்குள் என் மீதுற்ற வெறுப்பும் நீங்கியது. "அன்பு வெள்ளமே! என்ன பரிகாசமாகப் பேசி அவர் மனத்தைப் புண்படுத்திவிட்டோம்!" எனத் தனியே நோவாள். திடீரென்று ஒரு நாள் என் சபதம் அவள் நினைவிற்கு வந்தது. உட்கார்ந்தாள். எனக்கென ஓர் லிகிதம் வரைந்தாள்:—

'என் துரையே!

அறியாதவள் சொன்ன வார்த்தைகளை மனத்தில் வைக்காது உடனே வந்து என்னைப் பார்த்துப் போக வேண்டுகிறேன். நான் செய்ததெல்லாம் பிசகே. நீங்கள் என் பிழைகளைப் பொறுக்காவிட்டால் வேறு யார் பொறுக்கப் போகிறார்கள்? நான் உங்கள் ரஞ்சனுவல்லவா? உங்கள் வார்த்தைகளே என் காதில் எப்பொழுதும் ஒலிக்கின்றன.

எனக்கு இப்பொழுது இறக்கைகள் முளைத்திருக்கின்றன. நீங்கள் வரமுடியாவிட்டால் உத்தரவு கொடுங்கள். நான் உங்களிடம் பறந்து ஓடி வந்துவிடுகிறேன்.

என் இன்பமே! நான் மேலே சொன்னது சுத்தப் பொய். நான் பறந்து வந்துவிடுவேன்போல் தோன்றியது. உண்மையில் எனக்கு இவ்வித விகாரங்கள் ஒன்றும் தோன்ற வில்லை. நீங்கள் உடனே வரும்படி அநேக நமஸ்காரஞ்செய்து வேண்டிக் கொள்ளுகிறேன்.

உங்கள் சொந்த
ரஞ்சனு."

மனத்[illegible] [illegible]ரத்தில் அதை எவ்விதம் விலாசமிடுவதென்று அவளுக்குத் தோ[illegible]ற வில்லை. "ஸ்ரீயுத கிருஷ்ண மூர்த்தி ஐயர்" என்று பெ[illegible]ரை மாத்திரம் வரைந்தாள். மேல்விலாசம் எழுத அவளுக்குத் [illegible]ன்றவில்லை. [illegible] விலாசமி[illegible] [illegible]ரைத் தேடிப் பிடித்துக் கடிதத்தைச் [illegible]பிப்ப[illegible] [illegible]மை என்று நினைத்தாள் போலும்.

"சென்னை" என்று பின்னர் ஊரின்பெயர் தீட்டினாள். தபாற்பெட்டியிற் போட்டுவிட்டாள்.

பின், அண்ணனிடம் ஓடினாள். "அண்ணா! நான் எவ்வளவோ அபசாரம் செய்து விட்டேன்! அவர் வருவாரா?" என்றாள்.

கலியாணசுந்தரமையருக்குச் சில நாளாக இவள் நடத்தையொன்றும் புரியவேயில்லை. திடீரெனப் பைத்தியம் பிடித்து விட்டது சுந்தரிக்கு எனக் கருதலானார்.—"யாரடி?—"

"அது கிடக்கட்டும்—என்னை என் மாமியார் வீட்டிற்குக் கொண்டு போய் விடுங்கள்! என் மாமியாரே என் தெய்வம்!"

* * *

என் தாய் தந்தையர் இம்மாறுதலைக்கண்டு மிகவும் மன மகிழ்ந்தனர் என்னைத் தீபாவளிக்கும் மற்றைய விழாக்களுக்கும் வந்து போம்படி லிகிதம் விடுத்தனர். நானோ என் சபதம் மேற்கொண்டவனாய் ராஜா கிடைக்கவில்லை என்று சொல்லி, போகாது நின்று விட்டேன். கடைசியாகக் கிரிஸ்ட்மஸ்ஸைச் சேர ஒரு நாள் ரஞ்சனா என் அன்னையிடஞ்சென்று என் சபதத்தைத் தெரிவித்தனள். தான் ஓர் லிகிதம் விடுத்ததாகவும் சாற்றினள்.

அவர்கள் மிகவும் ஆச்சரிய முற்றனர். அன்றிரவே என்னைக்காணச் சென்னைக்குப் புறப்பட்டனர்.

V

*என் அத்தம்பியார் என்னைத் தன் வீட்டிற்கு வந்து போகும்படி இரண்டு மூன்று நாட்களாய் மணிக்கொரு முறையாக வந்து என்னை வேண்டினர். ஒரு நாள் போய் வரலாமென்று புரசைக்குப் புறப்பட்டேன் அங்கு என் தாய் தந்தையரைக் கண்டு வணங்கினேன்.

அன்று முழுவதும் பேச்சு. ரஞ்சனாவைப்பற்றி யாதொரு செய்தியுங் கிடையாது.

அன்றே என்னிருப்பிடஞ் செல்ல ஆயத்தமானேன். என் அத்தம்பியார் என்னை மறுதினமும் தங்கிப் போம்படி வற்புறுத்தினர். "இன்று போயென்ன ஆகவேண்டியது? நாளை ஞாயிற்றுக்கிழமைதானே?" என்றார். அவர் இது சொல்லும்பொழுது ஏதோ புன்சிரி[illegible]ன் கூறியதாக எனக்குப் பட்டது.

* அக்காள் கணவனை அத்தம்பியார் என அழைப்பது பிரா[illegible]ணர் வழக்கு.

எனக்கென ஒரு சிறு அறை ஒழித்து விடப்பட்டது. நான் அவ்வறைக்குட் சென்று சோபாவின் மீது சாய்ந்தேன். என் ஞானரதம் எங்கெங்கோ வானத்து வட்டமிட்டுச் சென்றது.

திடீரென்று பெருமூச்செறியும் சப்தம் என் காதிற்பட்டது. பேதையென்த் தேம்பியழும் ரஞ்சனாவைக் கண்டேன்.

மறுகணம் சுந்தரி என்மடியில் உட்கார்ந்துகொண்டு கிள்ளை மொழி பயின்றனள்..

நான் இது வரையும்போழ்து ரஞ்சனா என் பக்கலில் வீற்றிருந்தாள்.

"நான் இதை எழுதி அச்சுக்கனுப்பவா ரஞ்சனா?"

"என்! அனுப்புங்கள். நீங்கள்தான் என்னைக் காதலித்தது பிசகா? அல்லது நான்தான் உங்களைத் தெய்வமென்று கருதி வழி படுவது பிசகா? இழிவென்ன இதில்! உலகத்தில் இல்லாததா இது!" எனப் புன்சிரிப்புடன் புகன்று ஓடுகிறாள்.

அன்பர்களே! விடைகொடுங்கள். நான் இக்கணமே சென்று அவளை முத்தமிட்டுச் சிக்ஷிக்க வேண்டும். போய் வருகின்றேன்..

அங்கயற்கண்ணி.

ரசிகை.

ஓர் நவீன தமிழ் நாடகம்.

(36-ம் பக்கத் தொடர்ச்சி.)

ரசிகை:—ஹா! உனக்கு விவாகத்தில் விருப்பமே இல்லையா! பின்பு எதைத்தான் நீ விரும்புகிறாயடி?

வசீகரி:—நான் எதை விரும்புகிறேனென்று முன்னமே சொல்லி விட்டேனே.

ரசிகை:—நமது நாட்டின் க்ஷேமத்தைத் தவிர வேறொன்றையும் நீ விரும்ப வில்லையா?

வசீகரி:—ஆமாம் அக்கா, நமது தேச க்ஷேம மொன்றைத்தான் நான் விரும்புகிறேன்.

ரசிகை:—நீ சொல்வது உண்மையானால், வசீகரீ! உன்னைப்போன்ற சிறந்த தே[illegible]பிமானி உலகத்திலிருப்பது அரிதென்னலாம். அன்றியு[illegible] உன்னை [illegible]ங்களத்தினை நிர்த்தூளி பட உதறிய" நிகரற்ற ப[illegible] சந்யாசினி என்றுங் கூறலாம்.

வசீகரி:—என்னக்கா என்னைப் பரிகசிக்கிறாய்! நீ இப்படிப் பரிகசிப்ப[illegible]ற்காகவா [illegible] உள்ளத்தை உனக்குச் சொன்னேன்?

ரசிகை:—நான் பரிகசிக்கவேயில்லையடி, உண்மையைத்தான் சொன்னேன். நீ மாத்திரம் உண்மையைச் சொன்னாயோ என்னவோவென்று சந்தேகிக்கிறேன்.

வசீகரி:—நீ உரைத்தது எப்படி உண்மையாகும் அக்கா? தேசக்ஷேமத்தைப் பற்றிய ஆசை என் அகத்தில் அமர்ந்திருக்க என்னை "ஆசை நிகளத்தினை நிர்த்தூளி பட உதறினவள்" என்றாயே. இது பரிகசப் பேச்சல்லவோ?

ரசிகை:—அல்லவேயல்ல வசீகரி! அது பரிகசப் பேச்சே யல்ல. "ஆசை நிகளத்தினை நிர்த்தூளிபட உதறி" என்ற அற்புத மொழிகளைத் திருவாய்மலர்ந்தருளியவரும், அவ்வாறு ஆசையனைத்தையும் உதறி அகத்தை வென்றவருமாகிய மகான் தாயுமானவரும், "எல்லாரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே யல்லாமல் வேறொன் றறியேன் பராபரமே" என்றனர். உலகக்ஷேமத்தை மாத்திரம் விரும்பி மற்றெவ்வித அவாவையும் துறந்த அரிய தேசாபிமானிகளை மெய்த்துறவிகளென்றே கூறலாம். ஆகையால், வசீகரீ! நீ கூறிய யாவும் உண்மையானால் நீ ஒரு சந்யாசினியே யாவாய்.

வசீகரி:—அக்கா! நமது அம்மணி சாரதாம்பாள் உனக்குச் சிறந்த வாக்கு வல்லமை அளித்திருக்கிறாள். அவ்வல்லமையினால் நீ என்னென்னவோ நியாயங்களெடுத்துக் கூறி என்னைச் சந்யாசினி என்றழைத்துப் பரிகசிக்கிறாய். எனக்கு வெட்கமாயிருக்கிறது. சந்யாசத்திற்கு முக்கிய லக்ஷணம் அகந்தையை வெல்லுதலாம். ஆனால் அந்த அகந்தையே வசீகரி என்ற ஒரு பெண்ணுரு வெடுத்ததெனச் சொல்லலாம். அவ்வாறிருக்க, நீ என்னைச் சந்யாசினி என்றாய். அகந்தையின் அவதாரப் பெண்ணைச் சந்யாசினி என்றழைப்பதுதான் சத்தியமாகுமோ?

ரசிகை:—சற்று யோசித்துப்பேசடி வசீகரி! முதல்முதல் நீ என்ன சொன்னாய்? தேசக்ஷேமத்தைத் தவிர வேறொன்றையும் நீ விரும்பவில்லை என்றாய். ஆகையால் நான் உன்னைச் சந்யாசினி என்றேன். இப்பொழுதோ, அகந்தையின் அவதாரப்பெண் என்று நீயே உன்னை அழைத்துக் கொள்ளுகிறாய். பிரபஞ்ச நலத்தை விரும்புதலைத் தவிர சுயநல விருப்பமொன்று மில்லாதவள் எப்படி அகந்தையுடையவளா யிருப்பாள்? நீதான் உண்மையில் முரண்படப் பேசுகிறாய்.

வசீகரி:—சரிதான். நீ சொல்லியது மெய்யே. நான் முரணாகவே பேசினேன். உண்மையில் நான் மிகுந்த அகந்தை யுடை[illegible]தான். அவ்வகந்தையினாற்றான் நான் சுயநல மனத்தையுந் துறந்து உ[illegible]க நலத்தையே கருதும் உத்தமி என எண்ணிக்கொண்டேன். இப்பொழுதுதான் உ[illegible]னுடு சம்பாஷித்ததினால் நான் எண்ணியது தவறென்று உணர்ந்து கொண்டேனக்கா.

ரசிகை:—அப்படியானால் நீ சந்நியாசினி யல்லவோ?

வசீகரி:—அல்ல.

ரசிகை:—நீ உலக க்ஷேமத்தை மாத்திரம் கருதுகின்றவளு மல்ல?

வசீகரி:—அல்ல, அல்ல.

ரசிகை:—சில சுயநலங்களையும் நீ விரும்புகின்றாய் போலும். அவ்வாறு விரும்புகிறவளா யிருந்தாற்றான் நீ அகந்தையுடையவ ளாவாய்.

வசீகரி:—ஆமாம், அக்கா, சுயநல அபேக்ஷையைத் துறந்த தூயவர்களே அகந்தையை வென்றவர்கள். அவ்வாறு வென்றவர்களே மெய்ஞ்ஞானத்தை யுடையவர்கள். அந்த ஞானத்தை அடைவதற்கு நான் இன்னும் எத்தனை ஜன்மங்க ளெடுக்கவேண்டுமோ!

ரசிகை:—வசீகரீ! இந்தக் கதைகளெல்லாம் எனக்கு வேண்டாம், நீ சுயநல விருப்பமுடையவளா இல்லையா?

வசீகரி:—ஆமாம் அக்கா, நான் சுயாபிமானமும் சுயநல விருப்பமும் உடையவள்தான்.

ரசிகை:—நீ விரும்பும் சுயநலங்கள் என்னவென்றுதான் நான் அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

வசீகரி:—நான் விரும்பும் நலங்கள் எவையென எனக்கே நன்றாய்த் தெரியவில்லை.

ரசிகை:—நன்றாய்த் தெரியாவிட்டால் அக்கறையில்லை. தெரிந்த வரையில் சொல்.

வசீகரி:—என்மேல் கோபித்துக்கொள்ளாதே யக்கா. நீ கேட்கும் கேள்வியை நான் நன்றாய் உணர்ந்துகொள்ளவில்லை. அன்றியும் அதற்கு எப்படிப் பதிலுரைப்ப தென்றுந் தெரியவில்லை. முதல்முதல் நீ விரும்பும் விஷயங்களைச் சொல். நீ சொல்லும் விதத்தை நான் நன்றாய்க் கவனித்துக் கொண்டிருந்து அவ்விதமாக நான் விரும்பும் விஷயங்களைச் சொல்லுகிறேன்.

ரசிகை:—நான் விரும்பும் விஷயங்களைத்தான் முன்னமே உனக்குச் சொல்லியிருக்கிறேன்.

வசீகரி:—நீ முன்பு சொன்ன விஷயங்கள் எனக்குச் சரியாக ஞாபகத்திலில்லை. எல்லாவற்றையும் இப்பொழுது தெளிவாகச் சொல்.

(ரசிகை சிறிதுநேரம் மௌனமாயிருக்கிறாள்.)

வசீகரி:—[illegible]மிருவரும் உயிர்ச்சகோதரிகள். என்னிடத்தில் உன் உள்[illegible]த்தைச் சொ[illegible] என் இவ்வளவு நாணப்படுகிறாய்?

ரசிகை:—(சிறிது நேரம் மௌனம். பின்பு தலை தாழ்த்திக்கொண்டு புன்முறுவ[illegible]லுடன் கூறுகின்றாள்.) சுருக்கமாய்ச் சொல்லிவிடுகிறேன். நிறைந்த [illegible] சௌந்தரியமும், சிறந்த கல்வியும், சகல கல்யாண குணங்கள

எல்லாவற்றிற்கும் மேலாக என்னிடத்தில் முதிர்ந்த அன்பையுமுடைய, என் அகத்திற் கிசைந்த நாயகனை அடைவதே எனது பேரவா. (தலையை நிமிர்த்தித் தன் தங்கையின் முகத்தைப் பார்த்துக்கொண்டு) வசீகரீ! என் உள்ளத் தாசையைச் சொல்லிவிட்டேன், இப்பொழுதேனும் உன் விருப்பத்தைச் சொல்வாய்.

வசீகரி:—என் எண்ணங்களெல்லாம் ஆகாசக் கோட்டைகளக்கா. நிறைவேறக் கூடாத விஷயங்களை எண்ணியிருக்கிறேன்.

ரசிகை:—மனத்திற் பதிந்து நிலைத்திருக்கும் எவ்வித ஆசையும் நிறைவேறாமற் போகாது. அஞ்சாதே.

வசீகரி:—இல்லையக்கா. என் விருப்பம் இந்த ஜன்மத்தில் நிறைவேறாதென்றே எண்ணுகிறேன்.

ரசிகை:—உன் விருப்பம் இன்னதென்று நான் சொல்லேன். அது நிறைவேறும் நிறைவேறாதென்பதைப்பற்றிப் பின்பு ஆலோசிப்போம்.

வசீகரி:—(சிறிது நேரம் மௌனம்.) என் வீண் மனோராஜ்யங்களை நாவினாற் சொல்வதற்கும் எனக்கு வெட்கமாயிருக்கிறது. மற்றொருநாள் அவைகளை உனக்குச் சொல்லுகிறேன். இப்பொழுது நாழிகையாகிறது. நமது அம்மணியைத் தியானிப்போம் வா.

ரசிகை:—வசீகரீ! நீ உன் ரகசியத்தை இப்பொழுது எனக்குச் சொல்லாவிட்டால் என் மனம் தியானத்திற் செல்லாது. நாணப்படாதே என்று எனக்குமாத்திரம் சொன்னாயே. இப்பொழுது நீ என் இவ்வளவு நாணப்படுகிறாய்? சொல்லம்மா, நீ என் கண்மணியல்லவா!

(அன்பினாற் பரவச மெய்திய அகத்தோடு தன் ஆருயிர்த் தங்கையை ஆலிங்கனஞ்செய்து அவளது கன்னங்களை முத்தமிடுகிறாள். வசீகரியின் நெஞ்சமும் பரவசமுற்றுப் பதைக்கின்றது.)

வசீகரி:—(ரசிகையின் கன்னமொன்றை முத்தமிட்டு முறுவலுற்று மொழிகின்றாள்) அக்கா! உன்னிடத்தில் என் அவாவைச் சொல்லாமல் வேறு யாரிடத்திற் சொல்வேன்! ஆகையால் நானும் சுருக்கமாய்ச் சொல்லிவிடுகிறேன். உலகத்துப் பெண்களிற் பெரும்பாலார்க்கு மாறாக நித்திய கன்னிகையாயிருப்பதே எனது முக்கிய விருப்பம்; அன்றியும், ஓர் நாட்டிற் கரசியாகி, நமது அம்மணியின் பால் அரிய பக்தி பூண்டு, அவளது கடாக்ஷத்தினால், செழுமை, கல்வி, அறிவு, ஒழுக்கங்களில் அந்நாடு மேம்பட்டுத் துலங்க உழைப்பதில் என் வாழ்நாள் முழுமையும் அர்ப்பணஞ் செய்வதே இப்பிறப்பில் எனக்குப் பேரானந்தமாகும்.

அக்கா! ஓர் நாட்டிலுள்ள உயிர்களுக்குத் தலைவியாகும் உன்னத பதவியை விரும்பி அரசியாகக் கருதினேனென்று எண்ணாதே. அந்த ஜீவர் அனைவரது சுகத்திற்காக உழைக்கும் அடிமையாகும் பதவியையே

விரும்புகிறேன். அவ்வாறு பல்லாயிரம் ஜீவர்களின் நலங்களுக் குழைப்பதற்குத் தக்க பதவி அரச பதவி யென்றே எனக்குத் தோன்றுகிறது. அன்றியும் நான் பிறந்ததும் அரசகுலம். ஆகையினாற்றான் அந்தப் பதவியைக் கோரினேன். மற்றொரு விஷயம் உனக்குச் சொல்லுகிறேன். அப்பொழுதுதான் நீ என் உள்ளத்தை நன்றாய் அறிந்துகொள்வாய். நமது அம்மணியின் அருளினால் ஒருகால் நான் ஓர் நாட்டிற்கு அரசியானாலும், நான் விலையுயர்ந்த ஆபரணங்களை யணிந்துகொள்ளல், சொகுசான ஹம்ஸதூவி மஞ்சங்களில் சயனித்தல் முதலிய ராஜபோகங்கள் என்னப்படும் இன்பங்களைத் துறந்துவிடுவேன்,

அரச சபையிலிருக்கும்பொழுது மகுடம் செங்கோல் முதலிய அத்தியாவசியகமான ஆபரணங்களை மாத்திரம் அணிந்துகொள்வேன். அவைகளையும் என் துறந்துவிடக்கூடாதென்று நீ கேட்கலாம். சர்வஜன க்ஷேம அபிவிர்த்திக்காக உழைப்பதற்கு மிக்க அநுகூலமாயுள்ள ராஜ்யாதிகாரச் செல்வாக்கையும் பிரஜைகளின் அன்பையும் பெறுவதற்கு இச்சின்னங்கள் முக்கிய காரணங்களென்னலாம். ஆகையால் அவைகளை நீக்கவிடேன்.

அரண்மனையிலிருக்கும்பொழுதும் அரச சபையிலிருக்கும்பொழுதும் அதிக விலையில்லாத பரிசுத்தமான வெண்பட்டுடைகளையே தரித்துக்கொள்வேன். நமது அம்மணியும் வெண்கலை தரித்துத்தானே பிரகாசிக்கிறாள். அன்றியும் நான் எப்பொழுதும் அரண்மனையிலேயே தங்கியிரேன். பல்வேறுவித நடை உடை பாவனைகளையுடைய பிரஜைகளோடு பழகுவதற்குத் தக்கவாறு சமயோசிதமாய்ப் பல்வேறுவிதமாக எனது நடை உடை பாவனைகளை மாற்றிக்கொண்டு வருஷத்திற்கு ஆறுமாதங்களுக்குக் குறையாமல் தேசத்தின் எப்பக்கங்களிலும் சஞ்சரித்து, பிரஜைகளனைவரோடும் பழகி, அவர்களது குறைகளை அறிந்து, அவைகளை நிவர்த்திப்பேன்.

ஜனங்களுக் குழைப்பதி னிமித்தமாக இன்னும் என்னென்னவோ விஷயங்கள் என் அகத்தில் நிறைந்திருக்கின்றன. ஆனால் அக்கா! என் எண்ணங்களெல்லாம் வீண் மனோராஜ்யங்கள்தானே. அவைகளைப்பற்றி விரிவாய்ப் பேசுவதில் என்ன பிரயோஜனம்? நீ வற்புறுத்தியதால் ஒருவாறு சுருக்கமாய்ச் சொல்லிவிட்டேன். (தலை தாழ்த்திக்கொள்ளுகிறாள். அவளது இரு விழிகளினின்றும் இரண்டு ஜலத்துளிகள் பொங்கி அவளது இரு கன்னங்களிலும் வடிகின்றன.)

ரசிகை:—(தன் வலக்கையால் தன் சகோதரியின் கன்னங்களில் நின்று ஜலத்துளிகளைத் துடைக்கிறாள்.) வசீகரீ! என் விசனிக்கிறாய்? காருண்யம் நிறைந்த உன் விருப்பங்கள் என் மனோராஜ்யங்களாகும்? அவைகள் யாவும் நிறைவேறக் கூடியவைகளே. சாரதாம்பாளருளினால் நீ உனது ஜன்

பூமிக்கே அரசியாவாய். நான் உனக்குமுன் பிறந்தவளே யாயினும் அறிவில் நீ என்னைவிட மிகச்சிறந்தவள். நீ உன் வாழ்நாள் முழுவதையும் தேசத்திற்காக உழைக்கத் தீர்மானித்திருக்கிறாய். அன்றியும் அரசாட்சிப் பொறுப்பை வகிக்க எனக்குச் சிறிதும் விருப்பமில்லை, சக்தியுமில்லை. ஆகையால் நமது தந்தைக்குப்பின் நீயே நமது நாட்டிற்கு அரசியாக வேண்டும்.

வசீகரி:—இல்லையில்லை யக்கா. நான், நமது தந்தைக்குப்பின் இத்தேசத்திற்கு ராணியாகும் உரிமையை உன்னிடமிருந்து கவர்ந்து கொள்ளும் அற்ப சிந்தையுடையவளே யல்ல. தேச க்ஷேமத்திற்காக நான் அரசியாகக் கருதினேன். ஆனால் அரசியாயிருப்பதைப் போலவே அரசியின் உயிர்ச் சகோதரி யாயிருப்பதும் தேசக்ஷேமத்திற்குழைப்பதற்கு அநுகூலமாகவே யிருக்கும். ஆகையால் நீ ராணி யாகுங்காலத்தில் நான் உன்னோடு வசிக்கும் பாக்கியத்தைப் பெறுவதே எனக்குச் சம்பூரண திருப்தியை அளிக்கும். ஆனால் அக்கா! உயிர்ச் சகோதரிகளாயினும் நாமிருவரும் பெண்கள் தானே. மங்கைப்பருவ முற்ற பெண்களுக்கு மணஞ் செய்யாதிருப்பது தவறென்றெண்ணி நம்மிருவருக்கும் மணஞ்செய்து நம்மைப் பிரித்து விடுவார்களே. விவாகத்தைப்பற்றி நினைத்துவிட்டால், என் மனம் பதறுகிறது. (கைகூப்பிக்கொண்டு) அம்மணீ! சகல கலாவல்லீ! விவாகம் என்ற சாகரத்தில் விழாதவாறு நீதான் என்னைக் காப்பாற்றவேண்டும். (விழிகளில் மீண்டும் ஜலம் பொங்குகிறது. தன் ஆடையின் முன்றானையை அக்கண்களில் ஒற்றிக்கொள்ளுகிறாள்.)

ரசிகை:—என்னடி! விவாகத்தைச் சாகரமென்று கருதுகிறாய்?

வசீகரி:—ஆமாம் அக்கா. அது சாகரந்தான். எனது அவாவனைத்தையும் அவலமாய்க் கரைத்துவிடும் கொடிய சாகரம். உயிர்ச்சகோதரிகளாகிய உன்னையும் என்னையும் பிரிக்கும் பாதக சாகரம்.

ரசிகை:—இல்லையடி. இப்பொழுது நீ இப்படித்தான் பேசுவாய். ஆனால், உன்னைப்போல் உலக க்ஷேமாபிவிர்த்திக் குழைக்கக் கங்கணங் கட்டிக்கொண்டிருக்கும் உத்தம நாயகனொருவனை நீ காதலித்து, அவனது காதலையும் நீ கவர்ந்து கொண்டால் பின்பு நீ விவாகத்தை என்ன சாகரமென்று கருதுவாய் தெரியுமா? இணையற்ற இன்பசாகர மென்றுதான் கருதுவாய். உன்னுடைய உயர்ந்த நோக்கங்களில் ஒன்றேனுமில்லாத நான் இந்நாட்டிற்கு அரசியாக, நீ எனது உயிர்ச் சகோதரியாக என்னோடு வசித்தல் உனது விருப்பங்களை நிறைவேற்றி உனக்குச் சம்பூரண திருப்தியைக் கொடுக்கும் என்று நீ சொல்லியது தவறு. உண்மையில் நீ உனது உயர்ந்த விருப்பங்களுக்கும், உனது சௌந்தரியத்திற்கும், உனது கல்விக்கும் இசைந்த உனது அகத்திற்கினிய நாதனை மணந்து நீங்களிருவரும் இந்தச்

சரஸ்வதி தேசத்திற்கு அரசனும் அரசியுமானாற்றான் நீ சம்பூரண திருப்தியை யடைவாய். ஆகையால் வசீகரீ! உனது ஆசைகளெல்லாம் நிறைவேறும்வண்ணம் நீ உனக்குத் தக்க காதலனை அடைவதற்கு நமது அன்னை அருள் புரியுமாறு நீ அந்த அம்மணியைத் தியானித்துக் கொண்டிருக்க வேண்டும்.

வசீகரி:—என்னக்கா! நித்திய கன்னிகையா யிருப்பதே எனது முக்கிய விருப்பமென்று சொன்னேன். நீயோ, எனது எண்ணங்களெல்லாம் நிறைவேறுதற்கு நான் விவாகஞ் செய்து கொள்ள வேண்டுமென்று சொல்லுகிறாய். வெகு அழகாயிருக்கிறது உன்னுடைய புத்திமதி.

ரசிகை:—விவாகமின்றி கன்னிகையா யிருப்பதில் என்ன இன்பமடி யிருக்கிறது?

வசீகரி:—விவாகஞ் செய்து கொள்வதில் என்ன இன்பமக்கா இருக்கிறது?

ரசிகை:—என்ன இன்பமா? சொல்லுகிறேன் கேள். முதலில் நான் கேட்கும் ஒரு விஷயத்திற்கு மாத்திரம் பதில் சொல். நீ என்னோடு சம்பாஷித்து விளையாடிக் குலாவி யிருத்தலை விடத் தனிமையா யிருப்பது தான் உனக்கு அதிக இன்பத்தைக் கொடுக்கிறதோ?

வசீகரி:—இல்லையில்லை, ஏகாந்தத்தி லிருப்பதைவிட உனதருகேயிருப்பதுதான் எனக்கு அதிக ஆநந்தம்.

ரசிகை:—அவ்வாறானால் ஏகாந்தத்திலிருப்பதைவிட உன் உள்ளத்திற்கினிய காதலனோடு சம்பாஷித்துக் குலாவி யிருப்பதும் அதிக ஆநந்தந் தானே?

வசீகரி:—சீச்சி! என்ன வார்த்தைகளைப் பேசுகிறாயக்கா! நீ என் சொந்த சகோதரி. என்னுயிர்த்தோழி. ஏன்? என்னுயிர்த்தலைவி யென்றே சொல்லலாம். உன்னோடு குலாவியிருப்பது எனக்கு மிகுந்த ஆநந்தம். உன்னைப்பிரியும்படி நேரிட்டால் பின்பு ஏகாந்தமென்ற தோழிதான் எனது இனிய தோழியாவாள். வேறெந்தத் தோழியோடு குலாவினும் நான் சிறிதும் இன்பமடையேன். நீ சொன்னபடி ஒருபுருஷனோடு சம்பாஷித்துக் குலாவி யிருத்தலைப்பற்றி நினைக்கும்பொழுது ஆ! என் மனம் எவ்வளவு அருவருப்படைகிறது தெரியுமா! சீ! இனி அப்படிப்பட்ட வார்த்தைகளை என் முன் பேசாதேயக்கா.

ரசிகை:—(புன்னகையுடன்) என்னைத் தவிர ஏகாந்தம் என்ற நங்கைதான் உனக்கு இனிய தோழியென்றாய். நானும் ஒரு பெண்தானே. நான் மாத்திரம் ஏன் உனக்கு இனிய தோழியாகின்றேன்?

வசீகரி:—அக்கா! அதற்குக் காரணம் நான் உன்பாற்கொண்டிருக்கும் அன்புதான். வேறொன்றுமில்லை.

ரசிகை:—நீ என்னிடத்தில் அன்பு பூண்டிருப்பதால் நான் உனது உயிர்த்தலைவியா யிருக்கிறேன். நீயும் என்னோடு குலாவியிருப்பதில் இன்பமடைகின்றாய். அவ்வாறே நீ உனக்குத் தக்க நாதனிடத்துக் காதலுற்று விட்டால் அவனே உன்னுயிர்த் தலைவனாவான். அவனோடு குலாவியிருத்தலே உனக்குப் பேரானந்தமாகும்.

வசீகரி:—அக்கா! நீயும் நானும் ஓர் வயிற்றிலுதித்த சகோதரிகள். குழந்தைப் பருவத்திலிருந்து நாமிருவரும் ஒருவரையொருவர் பிரியாது ஒன்றாய்க் குலாவி விளையாடினோம். ஆகையால் என் மனம் உன்னிடத்தில் முதிர்ந்த அன்பு பூண்டிருக்கிறது. ஆனால் நான் இன்றுவரையில் ஒருபோதும் பார்த்திராத புருஷனொருவனை இனிமேற்கண்டு அவன்பாற் காதலுறுவதைப்பற்றிப் பேசுகிறாயே. காதல் அல்லது அன்பு நெடுநாட் பழக்கத்தினால் அகத்தைச் சார்ந்திருக்குமே யன்றி, புதிதாய்க் கண்ட ஒருவரிடத்து எப்படி உண்டாகும்?

ரசிகை:—வசீகரி! நீ காதல் அல்லது அன்பு என்று பேசியது பிழை. காதல் வேறு. அன்பு வேறு. அன்பு நீ கூறியவாறே நெடுநாட் பழக்கத்தினாலுண்டாகும். ஆனால் காதல் என்பது ஸ்திரீ புருஷர் இருவர் ஒருவரையொருவர் புதிதாய்க் கண்ட க்ஷணத்திலேயும் அவர்கள் உள்ளத்தில் பதிந்துவிடும் அற்புதக் கிளர்ச்சி.

வசீகரி:—(நகைத்துக்கொண்டு) க்ஷணப்பொழுதில் எப்படித்தான் அந்தப் புதுக்கிளர்ச்சி மனத்திற் பதியுமோ? ஏனக்கா இந்த அசம்பாவித விஷயத்தில் நீ நம்பிக்கை வைத்திருக்கிறாய்?

ரசிகை:—இது அசம்பாவித விஷயமா! அப்படியானால் சீதா பிராட்டியும் ராமபிரானும் ஒருவரையொருவர் கண்ட க்ஷணத்தில் அவர்கள் உள்ளத்தில் ஒப்பற்ற காதலுதித்ததும் பொய்யாகுமோ? யமராஜனை வெற்றிகொண்ட அற்புத சக்திவாய்ந்த சாவித்திரியின் அகத்தில் நிறைந்த மகத்தான காதல் அவள் சத்தியவானைக் கண்ட க்ஷணத்தில் அவள் மனத்திற் பதிந்ததும் பொய்யாகுமா? என்னடி வசீகரி! ஓர் அன்னப் பறவையின் வார்த்தைகளினிமித்தமாக நிடதநாட்டரசனாகிய நளனும் விதர்ப்ப நாட்டரச புத்திரியாகிய தமயந்தியும் ஒருவர்பாலொருவர் காதலுற்று மன முருகினார்களென்றால், ஆடவர் அரிவையர்கள் ஒருவரையொருவர் கண்ட க்ஷணத்தில் காதலுறுவது அதிசயமும் அசம்பாவிதமு மாகுமோ? நீ உன் அன்பிற்குரிய என்னோடு சம்பாஷித்துக் குலாவியிருப்பதில் அடையுமின்பத்தைவிட, உன் காதற்குரிய தலைவனை மணந்து அவனோடு இனிமையாகச் சம்பாஷித்துக் குலாவியிருப்பதால் நீ அடையும் இன்பம் பன்மடங்கதிகமாக யிருக்கும். நீ அத்தகைய இன்பமுறுமாறு உனக்கினிய காதலனை மணந்துகொண்ட பிறகுதான் என்வார்த்தைகளின் உண்மையை அறிந்துகொள்வாய்.

வசீகரி:—ஜானகியும் சாவித்திரியும் தமயந்தியும் புருஷர்கள்பால் காதலுற்றார்களென்றால் வசீகரியும் அவ்வாறு ஓர்புருஷனிடம் காதல் கொள்ளவேண்டியது அவசியமா! இது என்ன நியாயம்! அக்கா! நீ கூறிய காதல் என்ற கிளர்ச்சியையும் அதன் காரணமாக நிகழும் விவாகத்தையும் நான் விஷமாக வெறுக்கிறேன். மேலும்மேலும் அந்த விஷயத்தைப்பற்றி என்னோடு பேசாதே. நாழிகையாகிறது. நாம் தியானத்திற்குப் போவோம் வா.

ரசிகை:—உன்னுடைய நன்மையைக் கோரியே நான் உனக்குப் புத்திமதி சொல்லுகிறேன். மற்றொருமுறை இவ்விஷயத்தைப் பற்றிப் பேசுவோம். இப்பொழுது அதிக நாழிகை யாகிறதுதான். போவோம்வா.

(இருவரும் போகிறார்கள்.) (தொடரும்)

பத்திராதிபர்.

காயம் பிணி உற்றவர்களுக்குப் பிரதம உபசரணை.

முன்னுரை.

நீராவி, மின்சாரம் முதலியவைகளின் உதவியினால் நடக்கப்பெறும் யந்திரங்களைக் கொண்டு பலவித வேலைகளைச் செய்து வரும் சாலைகளிலுள்ள யந்திரங்களினாலும் மற்றும் பலவிதமான காரணங்களினாலும் மானிட தேகத்திற்கு நேரிடக்கூடிய கால் கை முறிதல், மொழிகள் பிறழ்தல், தோல் தசை நசித்துப்போதல், பெரிய காயங்களாதல், இரத்தம் வடிதல், ஸ்மாரணையின்மை முதலிய அபாயங்களைத் தேர்ச்சிபெற்ற சஸ்திர சிகித்ஸகர்களைக் கொண்டு நிவர்த்தித்துக்கொள்ளும் வரை அவ்வித அபாயங்களுக்குட்பட்டவர்களுக்கு உடனே சமயோசிதமாய்ச் செய்யவேண்டிய சிகிச்சை முறைகள், காயமடைபட்டவர்களுக்கு வேதனை அதிகரிக்காதபடி அவர்களைப் பிடிக்க எடுக்க அனுசரிக்கவேண்டிய முறைகள், அவர்களை ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்குக் கொண்டுபோக டோலிகளிலும் அதற்கென ஏற்பட்டிருக்கும் கைவண்டிகளிலும் அல்லது அவைகள் இல்லாத காலத்தில் அவர்களுக்குக் கஷ்டத்தை உண்டுபண்ணாத வேறுவித யுக்திகளினாலும் இலேசாய்த் தூக்கிக் கொண்டு போகவேண்டிய முறைகள், இவைகளைக்கொண்டு காயம் பிணி உற்றவர்களுக்குச் செய்யும் சகாயம் பிரதம உபசாரணை என்று சொல்லப்படுகின்றது.

அநேக இடங்களில் பெரிய காயங்கள் அடிகள் முதலிய அபாயங்கள் நேர்ந்தவுடன் தகுந்தபடி சிகிச்சை செய்யாததினால் எத்தனையோ ஜீவன்கள் உயிர்நீத்ததை நாம் பார்த்தும் கேட்டும் பத்திரிகைகளில் வாசித்தும் விசனித்த சமயங்கள் பல உள. அபாயத்திற் குட்படும் எவருமே அதிலிருந்து மீட்சி பெறுவதானது முக்கியமாய் அவர்களுக்கு உடனே செய்யப்படும் உதவியைப் பொறுத்ததாயிருக்கிறது. இத்தியாதி பிரதம உபசரணைக்குரிய விஷய விவரங்கள், தமிழில் இலௌகிக சாஸ்திர அபிவிர்த்தியை ஓர் நோக்கமாகக் கொண்டுள்ள இப்பத்திரிகை மூலமாகப் பிரசுரிக்கப்பட்டு வரும். அவற்றைச் சுதேச வைத்தியர்களும் ஏனையோரும் கவனித்து வாசித்தும் அவ்வவ்விடங்களில் இதில் அநுபவமுள்ள வைத்தியர்களிடம் பழகி சிறிது அப்பியாசமும் செய்துவந்தால், அவர்கள், எவருக்கேனும் தேகத்தில் அபாயம் நேரிட்டபோது அன்னோர் வலியைக் குறைப்பதிலும் உயிரைக் காப்பதிலும் உதவிபுரியக்கூடியவர்களாயிருப்பார்கள்.

பிரதம உபசரணை என்னும் விஷயம் வைத்திய சாஸ்திரத்தின் விசேஷமானதோர் பிரிவாயிருக்கின்றது. பின்னப்பட்டவர்களுக்குச் செய்யும் சிகிச்சை ரண வைத்தியத்தின் ஒரு பாகத்தைப் படித்துப் பழகிய அநுபவத்தைக் கொண்டு மாத்திரந்தான் செய்யக்கூடியவைகளாயிருக்கின்றன. இது வைத்திய சாஸ்திரத்தின் இதர அங்கங்களைப்போல் விரிவானதல்லவாயினும் பிணியாளிக்கு நிபுணரான வைத்தியர் வரும் வரையில் செய்ய வேண்டிய உபசார-சிகித்ஸா கர்மங்களை முற்றிலும் கொண்டிருப்பதால் யாவரும் இவ்விஷயத்தைப்பற்றி அறிந்திருக்க வேண்டியது அவசியமே.

பிரதம உபசரணைக்கு வேண்டிய முக்கிய பிரமாணங்களாவன:—

1. பிரதம உபசரணையைக் கற்றோர் தீங்கின் காரணங்களையும் சின்னங்களையும் கவனித்து உற்றறிகிறவராயும் அனுவசியமான கேள்விகளைக் கேட்காதபடி நோயினுடைய விவரங்களையும், அதன் குணங்களையும் விசாரித்தறியக்கூடிய சாமர்த்தியமுள்

ளவராயும் மேன்மேலும் கெடுதி விளையாதிருக்கும்படி நடந்துபோன கெடுதியைச் சரிப்படுத்த இயற்கையின் நிலைமைகளுக்குச் சரிக்கணமாயிருக்கும்படி கையிற் கிடைத்ததைக் கொண்டு சமய உசிதமாய்த் தக்கபடி உபயோகிக்கக்கூடிய திறமை வாய்ந்தவராயும் பிணியுள்ளவன் அல்லது பக்கத்தில் நிற்பவர்களைக்கொண்டு தனக்கு வேண்டிய உதவிகளை இன்னபடி செய்யவேண்டுமென்று திட்டமாய்ச் சொல்லத் தீர்க்கமுள்ளவராயும், அநேக காயங்கள் ஏற்பட்டிருக்குங்கால் தான் அவசியமாய்ச் சிகிச்சைசெய்யவேண்டியது இன்னது என்று பகுத்தறியக்கூடியவராயுமிருக்கவேண்டும்.

2. காயம் அல்லது அபாயத்திற்குக் காரணமாயிருப்பதை உடனே விலக்கவேண்டும். அதிகமாக இரத்தப் வடிதலைத் தான் முதல் முதல் கவனிக்கவேண்டும். மற்றக் காயங்கள் எப்படியிருந்தாலும் அவசியமில்லை.

3 ஜீவாதாரமான கருவிகளின் செய்கைகளுக்குச் சகாயமாயிருக்கும்படி சரீரத்தைப் பொறுப்பான அல்லது ஆதரவான நிலையில் வைக்கவேண்டும். மேன்மேலும் கெடுதி விளையாதிருக்கும்படி பிணியுற்ற பாகத்திற்குத் தாங்குபற்று கொடுத்து வைக்கவேண்டும். விசேஷமாய் எலும்புத் தகர்ச்சிகளுக்குத் தாங்குபற்று கொடுப்பது அதிக அவசியமான விஷயம்.

4. சுவாசக் குழாய்கள் அடைத்திராதபடி அதாவது பிணியுள்ளவன் சுவாசம் சரியாய் விடக்கூடியபடி தகுந்த நிலையில் வைக்கவேண்டும். மூச்சு நின்றுவிட்டால் அதைத் திரும்ப உண்டு பண்ணுவதற்கான முயற்சிகளை உடனே செய்யவேண்டும். தீங்கு நேரிட்ட பிறகு சீதோஷ்ண நிலைமை சாதாரணமாயிருக்க வேண்டிய அளவுக்குக் குறைந்துபோய்விடாதபடி சூடாக வைக்கவேண்டியது. தோல் தசை நசித்துப் போயிருந்தால் காயத்தை உடனே சுத்தமான நீர் உறிஞ்சக்கூடிய துணி பஞ்சு முதலியவைகளால் மூடி வைக்கவேண்டும்.

6· பாஷாணங்களை விழுங்கியிருந்தால் உடனே வெளியேற்றி எடுத்துவிட வேண்டும். அப்படிச்செய்யக்கூடாத காரியமாயிருந்

தால் மாற்று மருந்துகள் உட்கொடுத்து அவைகளின் சத்தைக் குறைக்கவேண்டும்.

5. பிணியுற்றவர்களைத் தூக்கிக் கொண்டுபோக வேண்டிய தக்க சாதனங்களை நன்றாய்ப் பழகி இருக்க வேண்டும். தரித்திருக்கும் உடைகளை அவிழ்க்க ஆவஸ்யகம் ஏற்படுங் காலத்தில் மேல்சட்டையை முதல்முதல் பழுதற்ற பக்கத்திலிருந்து கழற்றிக்கொண்டு பழுதானபக்கத்தில் சட்டைக்கைகளைப், கையல்வழி நேராய் மேல்நோக்கிக் கிழித்துக்கொள்ள வேண்டும். உட்சட்டையை முன்பக்கத்தில் கீழ்நோக்கிக் கிழித்துக்கொண்டு மேல் சட்டையைப் போல் கழற்றவேண்டும். கால்சிராய் போட்டிருந்தால் வெளிப் பொருத்தைக் கிழித்து எடுக்கவேண்டும். மேஜோடு பூட்ஸ் போட்டிருந்தால், மேஜோட்டை வெட்டி எடுத்து பூட்ஸின் பின்னைப்பலைக் கிழித்து வார்பின்னல்களை அவிழ்த்து விட வேண்டும்.

7. சாராயமொன்று தான் உத்தேபனமான வஸ்துவென்று, அடுத்து அடுத்து இலாகிரிவஸ்துக்களைப் பிணியுள்ளவர்களுக்குக் கொடுப்பது கெடுதி விளைவிக்குமேயன்றி நன்மை விளைவிக்கிறதென்று நினைப்பது அறியாமை. ஆகலால் டாக்டர் வரும்வரை சாராயம் முதலியதொன்றுங் கொடுக்காதிருப்பதே மிகவும் நல்ல காரியம். நோயாளி விழுங்கக்கூடிய சக்தியோடிருந்தால், பொறுக்கக்கூடிய அளவு சூடுள்ள காட்டமான தேத்தண்ணீர், காபி, அல்லது பாலேயாவது, அல்லது கொஞ்சம் பரிமள நவச்சாரமது வைத்தண்ணீரில் கலந்து, குடிக்கக் கொடுக்கலாம். பிணியாளி மூர்ச்சை அடைந்து தெளிவுறாமலிருந்தால் முகரும் உப்பை (sinelling salt) நாசித்துவாரங்களில் பிடிக்கச்செய்து. முகத்தில் குளிர்ந்த தண்ணீர் சுடுதண்ணீர் இவைகளை மாற்றி மாற்றி அடிப்பதினாலும், இரப்பைக் குழியிலும். இருதயத்தின்மேலும் வெப்பமான ஒத்தடங்கள் போடுவதினாலும், அவயவங்களை மேல்நோக்கி நன்றாய்த் தேய்ப்பதினாலும், தேகத்திற்கு உத்தேபனம் அல்லது உஷ்ணம் உண்டாகும். பிரதம உபசாரணையைச் செய்கிற ஒருவர் கடைசி வரையிலும் வைத்தியர் அல்லது சஸ்திர சிகித்ஸகர்கள் செய்யவேண்டிய பெரிய சிகித்ஸா முறைகளைத் துணிவுடன் எவ்

வித முகாந்திரத்தைக்கொண்டும் தானே செய்யக்கூடாது. சில வேளைகளில், பார்வைக்கு அற்பமாகத் தோன்றுகிற ஒரு காயம் நிச்சயமாகவே உயிருக்கு மோசமானதாயிருக்கலாம். டாக்டருக்கு ஆள் அனுப்புகையில், பிணியினுடைய தன்மை இன்னதென்று சொல்லி யனுப்பவும். ஆனால் எப்பொழுதும் வாய்மொழியாய்ச் சொல்லியனுப்புவதைப் பார்க்கிலும், நுட்பங்களை விவரமாய் எழுதியனுப்புவது அதிக நன்மையான விஷயமென்பதை மறந்து விடக்கூடாது.

பிரதம உபசரணை என்னும் இவ்விஷயத்தை வைத்தியரல்லாத புருஷர்களுக்கும், ஸ்திரீகளுக்கும் கற்பித்து, அபாயமுற்ற ஜனங்களுக்குச் சமயோசித உதவிபுரிந்து அவர்களைக் காப்பாற்றுவதை, எடுத்தற்கரிய மானிடப்பிறவிக்கு முதற்குறியாகிய காருண்யமென்ற மேலான தர்மமாகக்கொண்டு செயின்ட் ஜான் அம்புலென்ஸ் அஸோஸியேஷன் (Saint John Ambulance association) என்னும் பெரியதோர் சங்கம் சுமார் 40 வருஷகாலமாய் உலகத்தாருக்கு ஊழியம் செய்துவருகின்றதென்பதை, இவ்விஷயத்தைக் கற்க விரும்புவோர் அறிவார்களாக.

பிரதம உபசரணை என்னும் விஷயத்தை விவரமாக அறிய விரும்புவோர்கள் தேக அமைப்பின் தன்மைகளைப்பற்றி கூறும் உடற்கூறு நூலையும் (Anatomy) சரீரக் கிரியைகளைப்பற்றிக் கூறும் சரீர சாஸ்திரத்தையும் (Physiology) போதுமானவரை தெரிந்துகொள்ள வேண்டியது அவசியம். (தொடரும்.)

ரே. கோவிந்தசாமி நாயுடு.
மெடிக்கல்பிராக்டிஷனர் தூத்துக்குடி.

சரித்திரத் துவக்கம்.

19-ம் பக்கத்தொடர்ச்சி

முன் மழையில் சரித்திரம் என்றால் என்னவென்றும் சரித்திரப் பாங்கு எத்தன்மையதென்றும், சரித்திர அம்சங்கள் ஆதாரங்கள் முறைமை இன்னவை யென்றும் குறித்தோம். பிறகு மனிதன் ஆதிகாலத்தில் வசித்த வகையும், நாகரிக ஏணிப்படியில் ஏறின முறையும் ஒருவாறு விளக்கப்பட்டன. இனி இம்மழையில் சிருஷ்டி இயற்கையில் மனிதனுடைய ஸ்தானம், மானிட உற்பத்தி, மானிட இனங்கள் முதலிய விஷயங்களை விவரிப்போம்.

இயற்கையில் மனிதனுடைய ஸ்தானத்தைக் குறித்துப் பல அபிப்பிராய பேதங்கள் உண்டு. கிறிஸ்தவர்கள் கொள்கையில் கடவுள் மனிதனைத் தனது உருவத்தில் சிருஷ்டித்து, பிறகு முதல் மனிதனாகிய ஆதாம் அவருடைய கட்டளையை மீறி நடந்தபடியால் அவனை விஷப்பூண்டுகள், கொடிய விலங்குகள் முதலியன அடங்கிய இப்பூலோகத்தின்கண் தள்ளிவிட்டாரென்று கூறப்படும்.

ஆனால் மேனாட்டுச் சாஸ்திரிகளோ பூமிநாதனென்றும், சகல சிருஷ்டிகளின் மர்மங்களை அறிந்தவனென்றும், காணாக் கடவுளுடன் கலப்போனென்றும் சிறப்பித்துச் சொல்லப்படும் மனிதன் விலங்கினத்தைச் சேர்ந்த ஓர் விலங்கெனவே அபிப்பிராயப் படுவார். விலங்கினங்களை ஆராய்ந்து, உருவத்தினால் சற்றேறக்குறைய மனிதனை ஒத்திருக்கும் குரங்கினங்களைப் பரிசோதித்து முடிவில் மனிதன் குரங்கினின்றும் உற்பவித்தானென்று பாவிப்பார்கள். அதற்கிணங்க எலும்புக்கூடு, விலா எலும்புகள், பற்கள் முதலியவற்றில் மனிதனுக்கும் வாலில்லாக் குரங்குக்கும் நெருங்கிய ஒற்றுமை தோற்றுகிறது. ஆகவே விலங்குகளைப் பிடித்துப் பழக்கியும், பற்பல மிருகங்களை அடித்துப் புசித்தும் நிற்கும் மனிதன் மாமிச பக்ஷணி இனத்தைச் சார்ந்த விலங்கு ஆகின்றான். இருநூறு வருடங்களுக்குமுன் மனிதன் விலங்கென்ற எண்ணம் தோன்றின புதிதில் சில ஐரோப்பியர்கள் ஆஸ்திரேலியா தீவுக்குச் சென்றபொழுது அவ்விடத்தில் பின்னால் துணிவிட்டுக் கௌபீனம் தரித்திருந்த சுதேசிகளைக் கண்டு குட்டைவால் குரங்குகளெனக் கருதினார்களாம்.

இந்துக்களோ ஜீவாத்மாவானது மானிட யாக்கை உட்படப் பல்வேறு ஜீவராசிகளில் தனது கருமத்திற்குத் தக்கபடி ஜனிக்கிறதென்பார்கள். ஜன்மாநுஜன்மங்களுக்கு உதாரணமாகக் காதம்பரீ என்ற கதையைக் குறிப்பிடலாம். மானிட ஜன்மத்தினின்றும் இழிந்ததற்கு உதாரணமாகப் பன்றி ஜன்மம் எடுத்த குருக்கள் கதையைக் குறிப்பிடலாம்.

ஆனால், மனிதனுக்கும் மற்ற விலங்குகளுக்கும் பல்வேறு பேதங்கள் உண்டு. முதலில் இதர விலங்குகள் நாலு கால்களினாலும் நடக்கின்றன. மனிதனோ நிமிர்ந்து நடக்கின்றான். குழந்தைப்பருவத்தில் தவழும் பொழுதும் விலங்குகளைபோல முஷ்டியிட்டுத் தவழாமல் உள்ளங்கையினால் தவழ்கின்றான். முதுகெலும்பு அடிப்பாகத்தில் வாலுக்கு அறிகுறியாக வளைந்த எலும்பு ஒன்று மனிதனுக்கு உண்டென்றாலும், விலங்குகளுக்கு உள்ளதுபோல் நீண்ட வால் மனிதனுக்குக் கிடையாது.

உறுப்புக்களின் அமைப்பில், குரங்குகளுக்கு மனிதனைக்காட்டிலும் கைகள் நீண்டுள்ளன. குரங்கின் கீழ்வாய்ப்பூட்டு முன்னீண்டிருக்கும்.

மேலும் மனிதன் கைக்கட்டைவிரலின் நுனியால் இதர விரல்களின் நுனிகளைத் தொடச் சக்தி வாய்ந்துள்ளவன். இச்சக்தி விசேஷத்தினாலேயே இவ்வுலகில் பல கைத்தொழில்களும் சாத்தியமாகின்றன.

பஞ்சேந்திரிய வியாபாரங்களில் விலங்குகள் மனிதனைக் காட்டிலும் சிறந்தன. காட்சிப் புலனைக் கவனித்தால் மனிதனைவிடக் கருடன் கூர்மையான பார்வையுடையது. அதனாலன்றோ ஆண்டிகள் ஒருவனைப் புகழுமிடத்து கருடப்பார்வைக்காரனென்று புகழ்கின்றார்கள். மோப்பத்தில் நாய் மோப்பம் சிறந்தது. அதனாலன்றோ வேட்டையாடுவதிலும் துப்பறிவதிலும் நாய்களை உபயோகப்படுத்துகிறார்கள். மற்ற அறிவுகளிலும் அவ்விதமே.

ஆனால் கண்டு கேட்டு உண்டு மோந்து உயிர்த்த விஷயங்களை ஒன்றோடொன்று சம்பந்தப்படுத்தி அவற்றின் சாராம்சங்களைக் கிரகிப்பதில் மனிதனே சிறந்தவன். விலங்குகள் மனிதனைப்போல் கூச்சலிடக் கூடுமாயினும், கிளிப்பிள்ளைகள் மனிதனைப்போல் பேசக்கூடுமாயினும், நாய் முதலிய மிருகங்கள் மனிதனுடைய மொழிகளில் பலவற்றை அறிந்து நடக்கக் கூடுமாயினும், பக்ஷிகள் தேனீக்கள் விசித்திரமான கூடுகள் கட்டக்கூடுமாயினும், குரங்குகள் கற்களையும் கம்புகளையும் ஆயுதங்களாக உபயோகிக்கக் கூடுமாயினும், அவைகள் மனிதனைப்போல் முட்டைகளை உடைக்கக் கூடுமாயினும், எலிகள் ஒரேவிதமான பொறியில் அகப்படாமல் தப்பிக்கக் கூடுமாயினும், நாய்கள் எஜமானனை அறியவும் வழக்கங்களை மறக்காதிருக்கவும் வேட்டையாடுவதுபோல் கனாக்கண்டு குரைக்கவுங் கூடுமாயினும், விலங்குகளுக்கும் மனிதர்களுக்கும் உண்டாவது போல் திகிலில் தசைகள் நடுங்கவும், இருதயம் துடிக்கவும், மலஜலங்கழியவும், மயிர் சிலிர்க்கவுங் கூடுமாயினும், பகுத்தறிவில்மட்டும் ஒரு விலங்கும் மனிதனுக்கு நிகராகமாட்டாது.

தேனீக்கள் இயற்கையறிவினால் கூடுகள் கட்டுகின்றன; மனிதனோ பகுத்தறிவினால் விஷயங்களைக் கற்பிக்கின்றான். சொன்னதைச் சொல்லும் கிளிப்பிள்ளை; மனிதனோ தனது எண்ணங்களைப் பேச்சு மூலமாக வெளியிடுகிறான். நாய்கள் வேட்டையாடுவதாகக் கனாக் காண்கின்றன; மனிதனோ கதாரூபமாகக் கற்பனை உலகங்களைச் சிருஷ்டிக்கிறான்.

இதற்கு மேனாட்டுச் சாஸ்திரிகள் மனிதனுடைய மூளையின் பரிமாணமும் பக்குவமுமே காரணமாகுமென்பார். பால்கொடுத்துக் குட்டியை வளர்க்கும் பிராணிகளில் மிருதுவான சிறிய மூளையுடைய மீன் முதல், பருத்ததும் சுற்று கலையுடையதுமான மூளைக்கதிபதியான மனிதன் இறுதியாக உள்ள பிராணிகளின் மூளைகள் பரிமாணத்திலும் பக்குவத்திலும் பேதப்படுகின்றன. ஆனால் மனிதனுடைய மூளையே அளவிலும் பிரியிலும் மிகுந்

திருக்கிறது. வளர்ந்த மூளைக் கூடுகளில் சிறியதின் கனம் மனிதர்களில் 63 கன அங்குலத்திற்குக் குறைந்திராது. வாலில்லாக் குரங்குகளின் பருத்த மூளையின் கனம் 35 கன அங்குலத்திற்கு மேற்பட்டதில்லை.

இவ்வித மூளை மனிதனுக்கு வாய்த்த காரணம், சிறந்த ஆணும் பெண்ணுமாகப் பெற்ற குழந்தைகளில் தகுந்தவையே தப்பிப் பிழைத்து நானாவித குணங்களை அடைந்து தலைமுறை தலைமுறையாக மூளை பருத்து வந்தது தானென்று மேனாட்டார் கூறுவர். தற்காப்புச் சாதனங்களாகிய கனத்த உரோமம், கொடுக்கு, கூரிய நகங்கள், பற்கள், கொம்புகள், முட்கள், முதலியவற்றில் ஒன்றாவது அமையப்பெறாத மனிதன் என்றைக்குமுதல் தோலைப்போர்த்தானோ, என்றைக்குமுதல் ஈட்டியை வேட்டையில் உபயோகித்தானோ, என்று பாகம்பண்ண தீயை வளர்த்தானோ, என்று முதல் விதையைத் தெளித்தானோ, முதல் முளையை நாட்டினானோ, அன்றே இயற்கையில் பலமான மாறுதலுண்டாயிற்று. பூதங்களின் விளையாட்டுக் கருவியாயிருந்த மனிதன் அவைகளைச் சீர்ப்படுத்தி இயற்கை மாறுதல்களுக்குத் தகுந்தபடி தனது தேகத்தை மாற்ற முயலாமல் மனோதிடத்தால் அம்மாறுதல்களுக்கு ஏற்ற பரிகாரங்கள் செய்யலானான்.

ஆகவே மனிதனை இயற்கையில் கடந்துழலும் ஒருவகை யந்திரமென்றே மேனாட்டாரில் சிலர் கருதுவார்கள். தத்துவஞானம், ஆசார தர்மம் மதம், இவற்றைக் கருதுவதினாலேயே அவ்யந்திரத்திற்கும் மற்ற யந்திரங் களுக்கும் பேதமேற்படுகிறதென்றுங் கொள்வர்.

இந்துக்களில் ஆத்மஞானிகளோ காயமானது காற்றடைத்த பையென்றும் ஆத்மா நித்தியமானதென்றும் உரைப்பார்கள்.

மானிட யாக்கையைப் பலர் கடவுள் தனியே சிருஷ்டித்தாரென்றும் சிலர் அது தாழ்ந்த யாக்கைகளினின்றும் படிப்படியாகத் தோற்றினதென்றுங் கருதுவார்கள்.

பின்னவர்கள் தங்கள் கோட்பாட்டிற்குச் சான்றாகக் காட்டு மனிதர்களின் மூளை குரங்குகளின் மூளையை ஒத்திருக்கிறதென்றும் விலங்குகள் காதை அசைப்பதுபோல் மனிதர்களில் சிலரும் அச்சக்தி வாய்ந்தவர்களென்றும் பற்பல திருட்டாந்தங்கள் காட்டுகிறார்கள்.

(தொடரும்.)

ரா. சே. சுப்ரமண்ய ஐயர், எம். ஏ. எல். டி.

கண்ணம்மாள் கதை.

(40-ம் பக்கத்தொடர்ச்சி)

அத்தியாயம் 2.

கண்ணம்மாள் கணவன்! இவர் நமது கதையில் ஓர் முக்கியஸ்தர். ஆதலால் இம்மக புருஷனைப்பற்றிக் கொஞ்சம் பேசுவோம். அவன் பெயர் துரைசாமி. இவனது தகப்பனார் ஒரு இரத்தின வியாபாரி. அவருக்குக் கொஞ்சம் ஆஸ்தியும் கடனுமிருந்தது. ஆனால் அவர் இறந்த பிறகு அவரது சகோதரன் ஒருவன் அவரது வியவகாரங்களில் தலையிட்டான். துரைசாமியின் மதிகெட்ட தன்மையை அறிந்து அவன் விரும்பிய ஆகாரபானாதிகளெல்லாம் அவனுக் களித்தான், "ஐயோ! பாவி என் தகப்பனார் எனக்குக் கடன் முதலிய பெரிய தொல்லைகளெல்லாம் வைத்துவிட்டுப்போனார். என் சிறிய தகப்பனார் மாத்திரம் இல்லாவிட்டால் நான் தெருவில் நின்று தயங்குவேன். ஆ! என்னிமித்தம் அவர், என் தகப்பனார் விட்டுப்போன சிக்கலான வியவகாரங்களையெல்லாம் தன் தலைமேற் போட்டுக்கொண்டு அதனால் எவ்வளவோ சிரமப்பட்டு என்னை எவ்வளவு செல்வப்புதல்வனாய் வளர்த்து வருகிறார்" என்று துரைசாமி மகிழ்ந்துவிட்டான். ஆகையால் தன் சிற்றப்பன் சொன்னபடியெல்லாம் செய்தான். அவன் நீட்டின பத்திரங்களிலெல்லாம் கையெழுத்து வைத்தான். என்ன பத்திரம், ஏன் தான் கையெழுத்திடவேண்டும். என்றெல்லாம் கவனிப்பதேயில்லை. ஆனால் சிற்றப்பன் அன்பும் ஆதரவும் சிலமாதங்கள்தான் வாழ்ந்தன. அப்புறம் இனிப்பான இத வார்த்தைகளெல்லாம் படிப்படியாகக் கடுகடுத்த கசப்பு மொழிகளாக மாறின. ஒரு சமயம் துரைசாமிக்குக் கோபம் பொங்கி விட்டது. சிற்றப்பனுக்கும் மகனுக்கும் வாய்ச்சண்டை சண்டப்பிரசண்டமாய் நடந்தது. மகன்தான் முரட்டுப் பையனாயிற்றே. ஆகையால் ஆவேசம் தன்னைமீறிப் பொங்க, கைச்சண்டையைத் தொடங்கப்போனான். அதற்குள் எழுந்த பேரிரைச்சலினால் அயல்வீட்டுக்காரர் சிலர் வந்து சமாதானம் சொல்லிக் கைச்சண்டையை நிறுத்திவிட்டார்கள். சிற்றப்பன் மறுதினமே வேறு வீடு அமர்த்திக் கொண்டு தன் அருமை மகனைக் கைவிட்டுப் போய் விட்டான். துரைசாமி தன் பிதுரார்ஜித வீட்டில் தனிமையாய் நின்றான். இனி என்ன செய்வது என்று, தன் தகப்பனாருக்கு அறிமுகமான ஒரு வக்கீலிடம் சென்றான். அவர் இவன் தகப்பனாரது கடன் ஆஸ்திகள் சம்பந்தமான விஷயங்களையெல்லாம் ஆராய்ந்து பார்த்தார். துரைசாமியின் சிற்றப்பனையும் அழைத்து விசாரித்தார். அச்சிற்றப்பனோ வெகு சாமர்த்தியசாலி. ஆஸ்திகளின் மதிப்புக்குமேல் கடன் இருந்ததாக எப்படி எப்படியோ கணக்குக்காட்டினான். அன்றியும் அவன் சட்டத்திற்குச் செல்லக்கூடிய விதமாகத் தந்திரமாகப் பையனைக்கொண்டே சகல வியவ

காரங்களையும் செய்திருந்தான். துரைசாமிக்கோ வீடு ஒன்றுதான் பிதுரார்ஜிதமாக நிலைத்தது. வேறு ஒன்றுங் கிடையாது. ஆனால் பிதுரார்ஜிதக் கடனும் கிடையாது. அம்மட்டும் விட்டதற்காக அவன் சிற்றப்பனை, இந்நாட்டுக் குடும்பங்களைக் குலைத்துக் குட்டிச்சுவர் செய்யும் சில கோடரிக்காம்புகளைவிட நல்லவனென்றே சொல்லவேண்டும்.

இந்நிலைமையில் துரைசாமி தஞ்சாவூருக்கு ஒடிவந்தான். அங்கே சில மாதங்கள் இருந்தான். பின்பு அவன், கண்ணம்மாள், ருக்மாங்கதர், அவர் மனைவி, அவர் குழந்தை லக்ஷ்மி, ஆக அனைவரும் புறப்பட்டுக் கூடலூருக்கு வந்தார்கள். கூடலூர் வீட்டில் கண்ணம்மாள் இல்லறம் நடத்துவதற்கு வேண்டிய ஏற்பாடுகளும் செய்யப்பட்டன.

துரைசாமியின் கல்வியைப்பற்றிச் சில வார்த்தைகள் சொல்வோம். முதன்முதல் அவன் ஒரு சிறு தமிழ்ப் பள்ளிக்கூடத்தில் படித்து வந்தான். அங்கே முதல் வகுப்பில் வாசிக்கும்போதே "படிப்பில் விர்த்தியில்லை" என்று அவன் படிப்பைப் பற்றி அடிக்கடி உபாத்தியாயர் புகார் செய்து கொண்டிருந்தார். அவனது தகப்பனார் தன் பிள்ளையின் மூளைக்கும் தமிழ் உபாத்தியாயர் கற்பிக்கிற மாதிரிக்கும் பொருத்தமில்லை என்று சொல்லி அவனை இங்கிலீஷ் பாடசாலைக் கனுப்பினார். அங்கே எவ்வளவோ கஷ்டங்கள் பட்டு எட்டாவது வகுப்பு வரையில் வாசித்தான் துரைசாமி. ஒவ்வொரு வகுப்பிலும் கடைசியில் உட்கார்ந்திருக்கும் புத்திமான்களில் சிரேஷ்டனாக இருந்தான். எட்டாவது வகுப்புக்குமேல் தன்னால் பள்ளிக்கூடம் போக முடியவே முடியாதென்று பிடிவாதமாய்ச் சொல்லிவிட்டான். 'டைப் ரைட்டிங்' என்ற அச்செழுத் தடிக்கும் வித்தையாவது கற்றுக்கொள்ளும்படி அவன் தகப்பனார் ஏற்பாடுசெய்தார். ஆனால் மூன்று நான்கு மாதங் கழிந்ததும், "அந்தப் பாழுந் தொழிலுக்கும் எனக்கும் பிடித்தமேயில்லை. என் கைவிரல்களுக்குச் சகிக்க முடியாத உளைச்சலைக் கொடுக்கிறது. என்ன கஷ்டப்பட்டுத் தள்ளிக்கொண்டு போனாலும் நிமிஷத்திற்கு எழெட்டு வார்த்தைகள் கூட அடிக்க முடியவில்லை. அப்படி இப்படி அவஸ்தைப்பட்டு அடித்தாலும் அடித்ததெல்லாம் எப்படி எப்படியோ தப்புத் தப்பாகப் போகிறது. இதில் பழகுவது வீண். அல்லாமலும், பிழைக்கமாட்டாத புத்தியீனர்கள்தான் டைப்ரைட்டிங் கற்றுக்கொண்டு என்விதியே என்விதியே என்று தலையில் அடித்துக் கொள்வதுபோல் டக டக டக டக வென்று டைப் அடித்துக்கொண்டிருப்பார்கள். மேலும் டைப் அடிப்பவர்கள் கையெழுத்தும் அநியாயமாய்க் கெட்டுப்போகும் என்று சொல்லி டைப் ரைட்டிங் கற்பதை நிறுத்திவிட்டான். அப்பால் அவன் தகப்பனார் அவனுக்கு புக் கீப்பிங் என்ற வர்த்தகக்

கணக்குமுறை நூல், வீட்டுக்கு வந்து கற்பிக்கும்படி ஒரு உபாத்தியாயரை நியமித்தார். ஆனால் அது தனக்கு எள்ளளவு கூட அர்த்தமே ஆகவில்லை என்றும் எத்தனை வருஷங்கள் அதோடு மண்டையை யுடைத்துக்கொண்டாலும் அர்த்தமாகாது என்றும் சீக்கிரத்தில் கண்டுபிடித்து உபாத்தியாயரை வீட்டுக் கனுப்பிவிட்டான். பின்னர் அவன் தகப்பனார் ஏதேனும் ஒரு வர்த்தக சாலையில் அவனை ஒரு வேலையில் அமர்த்தவேண்டு மென்று முயற்சித்தார். ஆனால் குமாரன் "கூடலூரில் இரத்தின வியாபாரம் செய்யும் ஓர் பிரபல ஐசுவரியவானாகிய உங்களுக்கு மகனாகப் பிறந்த நான் ஒருவன் கீழ் அமர்ந்து வேலை பார்க்கிறதா! இதைவிட வெட்கக் கேடான காரியம் வேறு என்ன இருக்கிறது! சீ!" என்று சொல்லிவிட்டான். அவன் தகப்பனார் என்ன செய்வார் பாவம்! "என்னோடு இரத்தின வியாபாரமாவது கற்றுக்கொள்" என்று தானே தன் புத்திரனுக்குக் குருவாக ஆயினார். ஆனால் எத்தனை நாள் இரத்தினங்களோடும் வியாபாரிகளோடும் பழகியும் அந்த வியாபாரம் வெகு விசித்திரமாகவே தோன்றிற்று நமது கண்ணம்மாள் கணவனுக்கு. வியாபாரிகள் ஒருவர்க்கொருவர் கைகோர்த்து துணியால் அக்கைகளை மூடி, இரத்தின விலைகளைப்பற்றி இரகசியமாகப் பேசும் விதங்களைப்பற்றி அவன் தகப்பனார் அவனுக்குப் போதித்தும் இம்மாதிரி விதங்களெல்லாம் அவனுக்கு வெறுப்பாகவும் அசங்கியமாகவுமிருந்ததாம். "ஏன்! வெண்மையாக வாயினால் பேசினாலென்ன? இதிலென்ன மர்மங்களும் அழுத்தங்களும்! தமிழர் தொழிலெல்லாம் இப்படித்தான் ஊழல் நிறைந்திருக்கிறது. அதனால்தான் விர்த்திக்கு வருவதில்லை. ஐரோப்பியர் வியாபார வியவகாரங்களெல்லாம் எவ்வளவு நேராகவும் திருத்தமாகவும் இருக்கின்றன." என்று எல்லோருடைய வியவகார முறைகளையும் கரைத்துக் குடித்தவன்போல் பேசுவான். அன்றியும் டைப் ரைட்டிங் புக் கீப்பிங் இவைகளைவிடப் பன்மடங்கு சிக்கலாகவும் கஷ்டசாத்திய மாகவும் இருந்தது இரத்தின வியாபாரப் பயிற்சி. கற்களெல்லாம் மினுமினுப்பாகவும் மங்கலாகவும் இருக்கின்றன. இந்த மினுமினுப்பையும் மங்கலையும் கவனித்து, 11 வராகன், 12 வராகன், 27½ வராகன், 84 வராகன், 500 ரூபாய், 745 ரூபாய் என்று அடுக்கடுக்காகக் கற்களுக்கு மதிப்புச் சொல்லும் சமர்த்து எழுபத்தெட்டு வருஷம் மூக்கைப்பிடித்து மூச்சடக்கித் தவஞ் செய்தாலும் துரைசாமியின் மூளைக்கு எட்டவே எட்டாதுபோலிருந்தது. இந்தத் தொழிலிலும் இவன் பிரயோசனப்படான் என்று அவன் தகப்பனாருக்குத் தெரிந்துவிட்டது. இருந்தாலும் தன்னையும் ஒரு இரத்தின வியாபாரி என்று சொல்லிக்கொண்டு தன் தகப்பனார் வேலைக் காலங்களில் அவர் கூடவே இருந்து வந்தான். ஆனால் கடைசியில் ஒரு விபரீதம் விளைந்துவிட்டது. சுமார் 400 ரூபாய் மதிப்புள்ள ஒரு வைரத்தைத் துரைசாமி

மூலமாகக் கையாடியதில், அது எப்படியோ மாற்றப்பட்டு அதற்குப் பதிலாக 40 வராகன் கூடப் பெறாத வேறொரு வைரம் இரத்தின வியாபார புத்திர ரத்தினத்தின் கையில் வந்து விட்டது. மாற்றிய திருட்டு வியாபாரி யாரென்று கண்டுபிடிக்கக் கூடவில்லை. வைரத்தைக் கையாடியவர்களில் ஒருவர் அல்லது பலராயிருக்க வேண்டும். விஷயங்களைப் போலீசுக்குத் தெரிவித்தால் ஒருகால் உண்மை வெளியானாலும் ஆகலாம். ஆனால் துரைசாமியின் தந்தைக்கோ இந்த விஷயத்தைப் பிரமாதப்படுத்திப் போலீசாருக்குத் தெரிவிக்கப் பிரியமில்லை. இந்தவிஷயத்தில் சம்பந்தப்பட்ட வியாபாரிகள் ஒவ்வொருவரும் அவர் தாக்ஷிண்யத்திற்கும் வர்த்தகத்திற்கும் உரியவர்கள். போலீசுக்குப் போனால் அவர்கள் அனைவரையும் பகைக்க நேரிடும், ஊர் முழுதும் ஓர் அமளியாகும், இவைகளினால் தன் இரத்தின வியாபாரச் செல்வாக்கும் குன்றும், என்று கருதி, தன் புத்திரசிகாமணியின் புத்தி சூக்ஷ்மத்திற்கு யார்தான் என்ன செய்வது என்று ஒருவாறு தன்னைத் தேற்றிக் கொண்டு சும்மா யிருந்துவிட்டார். ஆனால் அன்று முதல் துரைசாமி இரத்தின வியாபாரத்தைக் கைகழுவிவிட வேண்டியதாயிற்று. சரியான வேளைக்குச் சாப்பாட்டுக்குக்கூட வீட்டுக்கு வரப் போதிய அவகாசமில்லாமல் இஷ்டப்படி ஊரைச் சுற்றிக்கொண்டு வரும் உத்தியோகத்தில் அமர்ந்தான். இந்த உத்தியோகத்திலிருந்து பெயரும்படி நேரிட்டது கண்ணம்மாள் கூடலூருக்கு வாழவந்த பிறகுதான்.

(தொடரும்.)

வாணீதாசன்.

அகந்தை.

ஓர் குழந்தையின் பாட்டு.

(குறிப்பு:—சகல புவனங்களுக்கும் தனித்தலைமை பூண்டு கருணாகரமாக விளங்கும் கடவுளை ஓர் தாயாகவும், இவ்வுலகத்து மாந்தர்களை ஓர் குழந்தையாகவும், கடவுள் அளித்துள்ள பலஅரும்பெரும் நலங்களை மிட்டாயாகவும் ஒருவாறு உருவகப்படுத்தி, சிறுவர் சிறுமியர்களுக்குப் பிரியத்தைத் தரும் ஒரு வேடிக்கையான மிட்டாய்ப் பாட்டாகவும் இருத்தல் வேண்டுமெனக் கருதி மிகத் தெளிவான மொழிகளால் அமைந்த நடையில் இப்பாட்டு எழுதப்படுகின்றது. தோற்றத்தில் வேடிக்கையான ஒரு குழந்தையின் பாட்டாயிருந்தபோதிலும், இதில் உயர்ந்த தத்துவம் அடங்கியிருப்பது காண்க.)

"சுத்தப்ரம பராத்பராராம்" என்ற மெட்டு.

1. அன்னை யம்மாள் என்னம்மாள்
அன்புடை யாளவள் என்னம்மாள்

தின்னத் தித்தித் திடும்மிட்டாய்
        தேனொடும் பாலொடும் எனக்களித்தாள்
கன்னம் வீங்கத் தின்று கொண்டு
        கையிலும் மடியிலும் கட்டிக்கொண்டே
சின்னஞ் சிறுதோ ழியருடனே
        சேர்ந்துவிளையாடச் சென்றுவிட்டேன்.

2. என்னைக் கன்னம் கைமடியை
        எறிட்டுப் பார்த்தனர் தோழியர்கள்
என்ன வதுவென் றெனைக்கேட்டார்
        யாவர்கொ டுத்தன ரெனக்கேட்டார்
என்மிட் டாய்தான் என்மிட்டாய்
        என்றுரைத் தேமிகக் களிகொண்டேன்
அன்னை யம்மாள் முகத்தினையும்
        அன்பையும் அழகையும் மறந்துவிட்டேன்.

3. என்மிட் டாய்தான் என்மிட்டாய்
        எதென எண்ணினும் என்மிட்டாய்
என்மிட் டாய்தான் என்மிட்டாய்
        என்னிடத் திருப்பதால் என்மிட்டாய்
என்மிட் டாய்தான் என்மிட்டாய்
        யான்புசித் திடுவதால் என்மிட்டாய்
என்னச் சொன்னேன் மதிமயங்கி
        இனியவென் அன்னையை மறந்துவிட்டேன்.

4. அன்ன வேளை எனக்குற்ற
        அதிசய அநுபவம் என்சொல்வேன்
கன்னம் நிறைந்த மிட்டாயும்
        கசந்தது வேப்பங் காய்போல
சின்ன மடிகை நிறைமிட்டாய்
        சீழென மாறியே வடிந்ததடீ
சின்னஞ் சிறிய தோழியர்கள்
        சிரித்தனர் சிச்சிச்சீ எனவிகழ்ந்து.

5. கன்னங் கசந்த மிட்டாயைக்
        காறியும் இருமியும் உமிழ்ந்துவிட்டேன்
சின்ன மடிகைச் சீழினையே
        சிதறிடச் சிதறிட உதறிவிட்டேன்

சின்னத் தனமாய்ச் சிறுக்கிகளும்
செங்கரங் கொட்டியே சிரித்தனர்காண்.
என்னாற் பொறுக்க முடியவில்லை
ஏங்கினேன் இருவிழி நீர்பொங்க.

6. என்னாற் பொறுக்க முடியவில்லை
ஏங்கினேன் இருவிழி நீர்பொங்க
கன்னம் அதரம் துடித்திடவே
கலங்கியே கதறியே அழுதுவிட்டேன்
அன்னை யம்மாள் என்னம்மாள்
அன்புடை யாளவள் என்னம்மாள்
என்னச் சொல்லி யழுதுகொண்டே
இல்லினுள் ஓடினேன் அவளிடமே.

7. அன்னை யம்மாள் என்னம்மாள்
அன்பினுக் கரசியாம் என்னம்மாள்
அன்னை யம்மாள் என்னம்மாள்
அழகினுக் கரசியாம் என்னம்மாள்
அன்னை யம்மாள் என்னம்மாள்
அவளது மடியிலே வீழ்ந்தழுதேன்
அன்னை யம்மாள் என்னம்மாள்
அன்புட னென்னையெடுத் தணைத்துக்கொண்டாள்.

8. அன்னை யம்மாள் என்னம்மாள்
அனைத்தையும் அறிபவள் என்னம்மாள்
அன்னை யம்மாள் என்னம்மாள்
அனைத்தையும் அறிந்தவள் ஆயினுமென்
கன்னங் கண்ணைத் துடைத்தெடுத்துக்
கண்மணி யழுதிடேல் எனத்தேற்றி
என்ன நிமித்தம் அழுகின்றாய்
என்றுரைத் தென்முகம் முத்தமிட்டாள்.

9. என்னக் கேட்ட என்தாய்க்கு
ஈரிதழ் பதைத்திட ஏங்கிக்கொண்டே
கொண்ணித் தேம்பிக் கூறினன்யான்
கொண்டதோர் இன்னலின் பான்மையெலாம்.
கன்னல் தின்னும் நாவெனவென்
கண்ணுங் காதுங் களியுறவே
என்னை நோக்கிப் புன்னகைபூத்

தெடுத்துரைப் பாளவள் என்னம்மாள்.
(அடுத்த மழையில் இப்பாட்டு முடிவுறும்).

கோகிலத்தோனி.

பௌதிக சாஸ்திர பாடங்கள்.

சமூகத்தின் எவ்விதமான உயர்விற்கும் அறிவே மூலாதாரம். அறிவிற்கு அடியாதாரம் கல்வி. கல்வியோ பாஷையால் ஆக்கப்பெற்றிருக்கிறது. சுவரின்றி சித்திரமில்லை. பாஷையின்றி கல்வி ஏது! ஆகவே கல்வியை ஓர் பாஷை அல்லது பல பாஷைகள் மூலமாகத்தான் பெறவேண்டும். பிற பாஷையில்விடத் தாய்ப்பாஷை மூலமாக எளிதாகவும் அதிக சீக்கிரத்திலும் கல்வி பெறலாமாகையால் அவ்வாறு கல்வி புகட்டும் முறையே உத்தமமானது. எனினும் ஒரு பாஷையின் மூலமாகப் பெறுங் கல்வி அப்பாஷையின் புஷ்டியையும் ஆழத்தையும் பொறுத்ததாயிருக்கிறது. வரிவடிவு (எட்டெழுத்து முறை) இல்லாத பாஷைகளும் வரிவடிவு இருந்த போதிலும் ஒரு சில சாதாரண நூற்களே உடைய பாஷைகளும் உள. அவைகள் மூலமாக என்ன கல்வியை அடைய முடியும். அப்படிப் பெறுவதையும் கல்வி என்னலாமா!

நமது நாட்டுக் கல்வி இயலுக்குத் திரும்புவோம். கி. பி. 1834ம் ௵ நமது அரசாங்கத்தார் ஆழ்ந்த ஆலோசனை செய்து இந்நாட்டுக் கல்வியை முக்கியமாக ஆங்கில பாஷை மூலமாகக் கற்பிப்பதெனச் செய்ததீர்மானமே இவ்வளவு காலமாக அநுசரிக்கப்பட்டு வந்திருக்கின்றது. அத்தீர்மானமும் அநுசரணையும் இதுகாறும் இருந்து வந்தமை நமது நலத்திற்கேயுரியதாயிற்று: எவ்வாறென்றுங் கூறுவோம். கல்வியை வைதிகக் கல்வி இலௌகிகக் கல்வி எனப் பாகுபாடு செய்யலாம். வைதிகக் கல்விக்குரிய கலைகளோ இந்நாட்டுப் பாஷையில் முக்கியமாக நமது தமிழ் மொழியில், சமுத்திரத்தினும் விசாலமும் ஆழமும் கொண்டவையா யிருக்கின்றன. ஆனால் இலௌகிகக் கலைகளையோ ஐரோப்பிய பாஷைகள் அபரிமிதமாகக் கொண்டுள்ளன. அவைகளை ஈண்டு எங்கணும் நிரப்பிப் பரவச் செய்யுமாறு ஆங்கில மொழி மூலமாகக் கல்வி புகட்டலாயிற்று. இஃது இத்தேய மொழிகளின், முக்கியமாக நமது தாய்த் தமிழின் அபிவிர்த்திக்கே இட்ட அஸ்திவாரம் என்ன வேண்டும். நல்லுணவுகளை நாடித் தன் கையாலேயே அவைகளை எடுத்துண்ணும் ஆசையும் ஆற்றலும் ஓர் குழந்தைக்குண்டாவது அதன் தாய் தன் கையால் உணவை எடுத்து ஊட்டி அக்குழந்தைக்கு அவ்வுணவின் தன்மையை உணர்வித்த பின்புதான். உயர்ந்த இலௌகிகக்

கலாஞானம் நமது சமூகத்து அறிவில் நன்கு பரவும் நிமித்தம் அக்கலாஞானத்தில் மிகச்சிறந்துள்ள ஆங்கிலக் கல்விநமக்கு ஏற்பட்டது. அவ்வாறே இலௌகிகக் கலாஞானமும் பரவிற்று. இந்த ஞான மனைத்தையும் நமது தமிழ் மொழிக்கு அர்ப்பணம் செய்து, எத்துணைய உன்னதமான விசாலித்த ஆழ்ந்த கல்வியையும் தமிழின் மூலமாகப் பெற இயலும் காலமும் சமீபித்து விட்டது.

தமிழ்! தமிழ்! தமிழ்! நெஞ்சத்திற்கும் நாவிற்கும் செவிக்கும் இனிய தமிழ்ப் பாஷையை அபிவிர்த்தி செய்யவேண்டும் என்ற அவா சுமார் பத்துப் பன்னிரண்டு வருஷங்களுக்குமுன்பு இருந்ததைவிட இப்பொழுது பன்மடங் கதிகரித்துத் தற்காலம் தமிழ் நாடெங்கும் பரவியிருக்கிறது. ஆனால் தமிழின் தற்காலத்திய அபிவிர்த்திக்குத் தக்க வழிகள் அனைத்தையும் தமிழ் நாடு நன்றாய் அறிந்து கொள்ளவில்லை என்னலாம். பழைமையிலும், இனிமையிலும், சொற் சுவை பொருட் சுவையாகிய இலக்கியச் சுவை செறிந்துள்ள அற நூற்களிலும், ஆத்மதத்துவ ஆராய்ச்சி நூற்களிலும், மற்றும் பல விதங்களிலும் தமிழ்மொழிக்கு இணைமொழி இல்லையெனத் துணிந்து கூறலாம். இத்துணைப் பெருமை வாய்ந்த தமிழ் இலக்கிய இலக்கண வைதீக நூற்களை ஆராய்ந்து கற்பதும் அவற்றைப் போன்ற நூல்கள் இயற்றுவதுந்தான் தமிழபிவிர்த்திக்குரிய முக்கிய முயற்சிகள் என்று பெரும்பான்மையோர் கருதுகின்றார்கள். உண்மையில் நமது தமிழை உன்னதப்படுத்த வேண்டுமாயின் முற்கூறிய சாதனங்கள் மாத்திரம் போதவே போதா. பௌதிக சாஸ்திரம் ரசாயன சாஸ்திரம முதலிய பிரகிருதி சாஸ்திரங்கள், தேச சரித்திரங்கள் பூகோள சாஸ்திரம், உயர்தரக் கணித சாஸ்திரம், முதலிய ஐரோப்பிய பாஷைகளிலுள்ள அருமையான விஷயங்கள் நமது பாஷையில் காணப்படவில்லை. இதை நினைத்துவிட்டால் நிஜமான பாஷாபிமானிகள் நெஞ்சம் நிச்சயமாக நோகும். பண்டைக்காலத்தில் தமிழும் தமிழ்நாடும் பெருஞ் சிறப்புற்றிருந்தன வெனத் தெரிகின்றதால் அக்காலத்தில் முற்கூறிய சாஸ்திரங்கள் தமிழில் அமைந்திருந்தாலும் இருக்கலாம். என்றாலும் தற்காலம் அந்தநூல்கள் ஐரோப்பிய பாஷைகளிற் பெருகியிருப்பதுபோல் நமது பாஷையில் இல்லவே யில்லை. ஆகவே ஐரோப்பிய பாஷைகள் அறிந்தவர்கள் அடையக்கூடிய இலௌகிக ஞான மவ்வளவு தமிழ்மாத்திரம் அறிந்தார் அடைவதற் கில்லாமற் போகின்றது. ஆகையால் இலௌகிக சாஸ்திரங்களாகிய ஆபரணங்கள் நமது தமிழ்த்தாயின் மேனியில் துலங்கச் செய்யவேண்டியது அத்தியாவசியகம். அப்பொழுதுதான் அவள் இந்த உலகில் தகுந்த அந்தஸ்தும் மதிப்பும் பெறுவாள்.

இலௌகிக சாஸ்திரங்கள் தமிழில் இல்லாத குறையை நிவர்த்திக்க மகத்தான முயற்சி நாட்டில் எழவேண்டும். அவ்வாறு எழச்செய்யும் பொறுப்பு ஐரோப்பிய பாஷைகள் பயின்று அப்பாஷைகளின் சாஸ்திரங்களில் நிபுணத்துவம் பெற்றிருப்பவர்களையே முக்கியமாகச் சார்ந்தது. ஆனால் அந்தப் பொறுப்பை வகிக்க அவர்களுக்குச் சுயபாஷாஞானமும் வேண்டுவது அவசியம். சுயபாஷாஞானம் இல்லாமையாற்றான் அவர்களில் அநேகர் தாங்கள் இதர பாஷைகளிற் கற்ற அரிய விஷயங்களைத் தமிழில் எழுதச் சக்தியற்றவர்களாயிருக்கிறார்கள். ஆகவே ஐரோப்பிய பாஷையில் வல்ல அறிஞராகிய தமிழர் அனைவரும் திட்டமான தெள்ளிய இனிய பிழையற்ற தமிழ் நடை எழுதப் பழகி இலௌகிக நூற்களைத் தமிழில் அமைப்பதில் விசேஷ கவலையெடுத்து முயற்சித்துவரக் கடமைப் பட்டுள்ளார்கள். சுயபாஷையில் கல்வி! சுயபாஷையில் கல்வி! என்று நீள நீளமாகப் பிரசங்கங்களும் பத்திரிகை வியாசங்களும் (முக்கியமாக ஆங்கிலத்தில்) முளைத்துச் சலசலக்கின்றனவேயன்றி, சுய பாஷைக் கல்விக்கு அத்தியாவசியகமான, சுய பாஷையில் இலௌகிக நூற்கள் ஏராளமாகப் பெருக்கும் சத்தான பெரிய எத்தனங்கள் இன்னும் தோன்றின பாடில்லை.

ஆனால், தமிழின் ஏற்றத்தை நாடியிருக்கிற தெய்வத்திருவருள் தமிழ் எக்காலும் இந்நிலைமையில் இருக்கச்சம்மதியாது. இனி தமிழ் உன்னதமடையத்தான் வேண்டும். ஆகையால் இதர பாஷைகளிலுள்ள இலௌகிகக் கிரந்தங்கள் தமிழில் அமையத்தான் வேண்டும். இது சம்பந்தமான பெரிய எத்தனங்கள் இன்னும் சரியாக ஏற்படவில்லையாயினும் அதற்குரிய சிறு சிறு சின்னங்கள் சிற்சில மூலங்களிலிருந்து தோன்றிக் கொண்டுதானிருக்கின்றன. அத்தகைய மூலங்களில் ஒன்றெனவுங் கொள்ளுமாறு தமிழில் இலௌகிக நூற்களின் அபிவிர்த்தியைத்தன் நோக்கங்களில் ஓர் பகுதியாகக் கொண்டு இப்பத்திரிகை உதிக்க நேர்ந்தது என்னலாம். அந்நோக்கத்திற்கிசைய பௌதிக சாஸ்திரம் (Physics) என்ற அரும் பெரும் நூலின் பல பல விசேஷ விஷயங்களைச் சிறு சிறு பாடங்களாகத் தமிழில் எழுதவேண்டுமெனத் தீர்மானித்துள்ளோம். ஆதலின் அடுத்த மழையிலிருந்து நமது வருஷிணியில் அப்பாடங்கள் தொடங்கப்பெறும். எடுத்துச்சொல்லும் பொருள்களைத் திட்டமும் தெளிவும் வாய்ந்த தமிழ் நடையில் பொதுஜனங்களுக்குப் பிரியமான விதமாகக் கூறவேண்டுமென்பது நமதுகருத்து. இக்கருத்து எவ்வளவு தூரம் நிறைவேறுமோ? அதனை நமது நேயர்களது நிர்ணயத்திற்கு விடுகின்றோம். இப்பாடங்களை வரைவது நிதரிசனமான ஒருபெரிய பௌதிக சாஸ்திரம் அமைத்துவிட வேண்டுமென்பதற்காக வல்ல; இத்தியாதி நூற்கள் தமிழில் அமைவதின் அவசியத்தைப்பற்றி ஒரு

வாறு வற்புறுத்தும்பொருட்டே. கடவுள் திருவருள் துணைநின்று காப்பதாக.

பத்திராதிபர்.

பாம்பின் சாபம்.

ஆறுமாதங்களுக்கு முன் ஒரு வியவகார விஷயமாக விருதுப்பட்டிக்குப் போய் மாலை 5½ மணி வண்டிக்கு மதுரைக்குத் திரும்புமாறு இரண்டாவது வகுப்பு டிக்கெட் எடுத்துக்கொண்டு வண்டியை எதிர்பார்த்துப் பிளாட்பாரத்தில் உலாவிக் கொண்டிருந்தேன். டிக்கெட் பரிசோதகர் பலமுறையும், ஸ்டேஷன் மாஸ்டர் இருமுறையும், என்னை இரண்டாவது வகுப்புப் பிரயாணிகள் தங்குமிடத்தில் நாற்காலியில் உட்காரும்படி வேண்டிக்கொண்டும் முடியாதென மறுத்துவிட்டு மறுபடியும் காலாற உலாவின வண்ணமாயிருந்தேன். மூன்றாவது வகுப்பு டிக்கெட் எடுக்கும் ஏழை ஜனங்கள் படுங் கஷ்டங்களையும் பிரயாணிகள் அறியாமைக்குக் காரணமாகக் கம்பெனி வேலைக்காரர்கள் செய்யும் அமுல்களையும் பணத்தினால் பிரயாணத்தில் உண்டாகும் சுகங்களையும் குறித்து யோசித்துக் கொண்டிருக்கும்பொழுதே பலத்த ஆரவாரத்துடன் வண்டி வந்து சேர்ந்தது. இறங்கி யேறுபவர்களின் சந்தடியையும் கூலியாட்களின் கூச்சலையும், ஸ்டேஷன் அதிகாரிகளின் பரபரப்பையும், எஞ்சின் இரைச்சலையும், தின்பண்டம் விற்பவர்கள் சோடா லிமினெட் விற்பவர்கள் முதலிய பல வியாபாரிகளின் ஆரவாரங்களையும், புளிமூட்டை யடைவது போல் ஒரே வண்டியில் பலபேரடைந்து இடத்திற்காக அவர்கள் செய்யும் சச்சரவுகளையும், இன்னும் பல வித நிகழ்ச்சிகளையும், கவனித்துக் கூட்டமாகப் பிரயாணஞ் செய்வதினா லுண்டாகும் சௌகரியாசௌகரியங்களைப்பற்றிச் சிந்தித்து அறிந்தவர்களுக்கு வந்தனமளித்துக்கொண்டு ஒரு கோடியிலிருந்து மறு கோடிக்குச் சாவதானமாக உலாவி வண்டி புறப்பட்டு மெதுவாக ஓடும்பொழுதே இரண்டாவது வகுப்பு வண்டியி லேறிக்கொண்டேன்.

அங்கியைக் கழற்றி ஆணியில் மாட்டிக் கூலியாள் குப்பலாய்க் குவித்திருந்த பொட்டணங்களைப் பலகையின் கீழ் அடுக்கி

வைத்து மின்சார விசிறியைச் சுழற்றிவிட்டு ஜன்னலுக்கு அடுத்த இடத்தில் அமர்ந்துகொண்டேன். என்னைத்தவிர அந்த அறையில் வேறொரு பிரயாணி இருந்தான். க்ஷய ரோகங் கொண்டவன் போல் இளைத்து முகம் வெளுத்து எலும்புகள் வெளித்தோன்ற சிறுப்பிரேதம்போல் முக்காடு போட்டுக்கொண்டு படுத்திருந்தான். நோயாளிவண்டியில் ஏறிவிட்டதற்காக மனங் கசிந்தாலும் அது மெயிலாதலால் திருமங்கலம் வரை வேறு வழியில்லாமல் பொழுது போக்குவதற்காக, "கமலாம்பாள்" என்ற சிறந்த கதைப் புத்தகத்தைக் கையிலெடுத்தேன். மனம் படிப்பில் நிலை நிற்காமல் நமது தேசத்தின் நிலைமையைச் சார்ந்த பற்பல விஷயங்களைப் பற்றிச் சிந்திக்கலானேன். இவ்விதம் ஆலோசனையில் ஆழ்ந்திருந்தபொழுது வண்டித்தொடர் திருமங்கலத்தைக் கிட்டிவிட்டது. வண்டி நிற்பதற்குமுன் மெதுவான ஓட்டத்திலிருக்கும் பொழுதே எனது பழைய தோழர்களாகிய கார்டு ஸ்டேஷன் மாஸ்டர் இருவர்களுக்கும் வந்தனமளித்துவிட்டுக் கீழே இறங்குவதற்காகக் காலைப் பெயர்த்துவைத்தேன். "என் ஐயா ராமநாதன் பிள்ளையவாள்! அசங்கியப்பட்டோ கீழே இறங்குகிறீர்கள்? ஓட்டுவாரொட்டி நோயல்ல, தாராளமாய் இந்த வண்டியிலேயே மதுரை வரையில் போகலாம்." என்ற பேச்சுக்குரலைக் கேட்டு, திக்பிரமைகொண்டு திரும்பி நோக்கினேன். எனக்கு உண்டான ஆச்சரியத்திற்கு அளவில்லை. ஒரு நிமிஷத்துக்குமுன் கண்ட நோயாளியின் சின்னங்களில் ஒன்றேனுங் காணவில்லை. தேக விளைப்பு, முக வெளுப்பு, நோயாளியிருமல், கம்பளி மூட்டம் எல்லாம் பறந்துவிட்டன. வாலிபதிசை முற்றும் நீங்காத பக்குவத்தையுடைய ஒரு மனிதன் உட்கார்ந்திருக்கக் கண்டேன். கண்களைத் துடைத்து உற்று நோக்குகையில் என்னுடன் பாலியத்தில் படித்துப் பிறகு சிங்கப்பூர் சென்றிருந்த சங்கரலிங்கதாசனைத் தோற்றியது. இவ்வதிசயத்தால் மனங்கலங்கி, வண்டி புறப்பட்ட அதிர்ச்சியில் கதவில் மொத்துண்டு அசக்தனாய் ஆசனத்தில் சாய்ந்துவிட்டேன். பிறகு குலைந்த எண்ணங்களை ஒருவாறு சீர்ப்படுத்தி தைரியங்கொண்டு "நீயார்?" என எதிரில் தோற்றிய உருவத்தை வினவினேன்.

றும், தேருக்கு, தே என்றும், காலாளுக்கு, கா என்றும், குறிப்பிடுவது வழக்கம்.

ஆட்டத் துவக்கத்தில் சிவப்புக்காய்க்காரர் ஒரு யானையை அ1 இலும், மற்றொரு யானையை ஏ1 இலும், ஒரு குதிரையை ஆ1 இலும் மற்றொன்றை எ1 இலும், ஒரு தேரை இ1 இலும், மற்றதை ஊ1 இலும் அரசனை உ1 இலும், மந்திரியை ஈ1 இலும் எட்டுக் காலாட்களையும் அ2, ஆ2, இ2, ஈ2, உ2, ஊ2, எ2, ஏ2 என்ற கட்டங்களிலும் வைக்கவேண்டும். பச்சையில் யானைகளை அ8, ஏ8 இலும், குதிரைகளை ஆ8, எ8 இலும், தேர்களை இ8, ஊ8 இலும், அரசனை உ8 இலும், மந்திரியை ஈ8 இலும், எட்டுக் காலாட்களையும் அ7, ஆ7, இ7, ஈ7, உ7, ஊ7, எ7, ஏ7, என்ற கட்டங்களிலும் வைக்கவேண்டும். இது ஐரோப்பிய முறை. மொகலாய முறையில் பேதமுண்டு.

ஒவ்வொரு ஆட்டக்காரரும் எதிரி அரசனைக் கட்ட முயல வேண்டும். கட்டுவதென்றால் அரசனுக்கு நகர இடமில்லாமல் செய்துவிடுவதே. எதிரி அரசனை வெட்டக்கூடாது.

அரசன் ஒரு ஆட்டத்திற்கு ஒரு கட்டமாகத் தன்னைச் சுற்றியுள்ள எட்டுக் கட்டங்களில் ஏதாவது ஒன்றுக்கு நகரலாம். அரசன் நகரக்கூடிய கட்டத்தில் எதிரியின் காய் பலமில்லாமல் நின்றால், அதை அரசனால் அடிக்கலாம். அடிப்பது அல்லது வெட்டுவதென்றால எதிரி காயைப் பலகையைவிட்டு விலக்கித் தன்காயை எதிரி காய் நின்ற கட்டத்தில் வைப்பதுதான்.

ஒரே கட்டத்தில் இரு காய்கள் இருக்கலாகாதாகையால், அரசன் நகரக் கூடிய கட்டத்தில் சொந்தமனிதன் நின்றால் அரசன் அக்கட்டத்திற்குச் செல்ல முடியாது.

மற்ற எந்தக் காய்களை வெட்டினாலும் வெட்டுக் கொடுத்தாலும், அரசனை ஒருகாலும் வெட்டவாவது வெட்டக் கொடுக்கவாவது ஆகாதாகையால் எதிர்ப் படைகள் பார்க்கக் கூடிய கட்டங்களுக்கும் அரசன் செல்லலாகாது.

(தொடரும்.)

ரா. சே. சுப்ரமண்ய ஐயர், எம். ஏ. எல். டி.

பத்திரிகைப் பண்புரை.

ஞானோதயம். பத்திராதிபர், ஸ்ரீமான் சிவ. பெ. ராமலிங்க நாடார், தூத்துக்குடி. இஃது நமது நகரத்திலிருந்தே சென்ற சித்திரை மாதத்திலிருந்து பிரசுரிக்கப்பெற்று வரும் மாதப்பத்திரிகை. சுகாதாரம், பக்தி, யோகம், ஞானம், பொதுவிஷயங்கள், நாவல் முதலியவற்றைச் சார்ந்த இலௌகிக வைதிக விஷயங்களும், நாடார் குலத்தவர்களின் அபிவிர்த்திக்குரிய விசேஷ வியாசங்களும் கொண்டிருக்கின்றது. வருடச் சந்தா ரூ 2–0–0.

கலைமகள். பத்திராதிபர், ஸ்ரீமான் சி. பங்காருப் பத்தர், கல்வே காலேஜ் தமிழ்ப்பண்டிதர், புதுச்சேரி. இஃது புதுச்சேரியிலுள்ள கலைமகள் கழகம் என்ற தமிழ்ச் சங்கத்திலிருந்து பிரசுரிக்கப் பெறுவதாய், சிறந்த தமிழாராய்ச்சி, பல பெரியோர்கள் சரித்திரங்கள், தற்போதைய தேச கால இயலுக்கு ஏற்ற நல்ல வியாசங்கள், தத்துவ விசாரணை விஷயங்கள் முதலியவற்றைப் புனைந்து, தன் பெயருக் கேற்பப் பீடும் பொற்பும் பொருந்தி விளங்கும் ஓர் அருமையான மாதப் பத்திரிகை. இதில், திருக்குறட் பாக்களின் கருத்தைத் திரட்டித் தெளிவுற விளக்கி, அவ்வுயரிய தமிழ் நூலின் ஒவ்வொரு அதிகாரத்திற்கும் ஒவ்வொரு வியாசமாக இனிய வசன நடையில் பத்திராதிபர் அவர்கள் எழுதி வருவது விசேஷித்துப் பாராட்டத்தக்கதும் பெரிதும் பயன் தரக்கூடியதுமாம். வருடச் சந்தா புதுச்சேரி வாசிகளுக்கு ரூ 1–0–0, வெளியூரார்க்கு ரூ 1–4–0.

ஜனோபகாரி. வேலூரிலிருந்து வரும் ஓர் மாதப்பத்திரிகை. இதன் சொந்தக்காரர் மெஸ்ஸர்ஸ் வி. என். சாமராவ் அண்டு கம்பெனியாருக்காக ஸ்ரீமான் வி. என். வைத்[illegible]ையா அவர்களால் பிரசுரிக்கப்படுகிறது. வியவசாயம், கைத்தொழில், வைத்தியம், பொருளாதாரம், சமுதாய இயல் முதலிய பலவகைத் துறைகளைச் சார்ந்த பிரியமான வியாசங்கள் இதில் காணப்படுகின்றன. வருடச் சந்தா ரூ 3–0–0.